## விதை நெல்கள் சரியான நேரத்தில் வழங்கப்படுவதில்லை

First Published : 12 Jan 2010 11:19:24 AM IST
Last Updated :

ஆரணி, ஜன. 11: விவசாயிகளுக்கு சரியான நேரத்தில் விதை நெல்களை வேளாண்மைத் துறை வழங்குவதில்லை என்று ஒன்றியக் குழு உறுப்பினர் புகார் கூறினார்.

ஆரணி ஒன்றியக் குழுக் கூட்டம் அதன் தலைவர் தாட்சாயிணி அன்பழகன் தலைமையில் திங்கள்கிழமை நடைபெற்றது.

கூட்டத்தில் ஒன்றியக் குழு உறுப்பினர் மெய்யழகன், "சரியான நேரத்தில் விதைநெல்களை வேளாண்மைத் துறையினர் தராததால் விவசாயிகள் பாதிக்கப்படுகின்றனர்' என்றார்.

இதற்குப் பதிலளித்து வேளாண்மைத் துறை இணை இயக்குநர் ஏ.டி.செல்வராஜ் பேசும்போது, ஏராளமான விவசாயிகள் விதை நெல்களை பெற்றுச் செல்கின்றனர். இதனால் அனைத்து விவசாயிகளுக்கும் விதை நெல்கள் வழங்க தாமதமாகிறது' என்றார்.

தொடர்ந்து, ஒன்றியக் குழு உறுப்பினர் சீனிவாசன் பேசும்போது, விவசாயிகளுக்கு சவுக்கு மரக்கன்று வழங்க வேண்டும் என கோரிக்கை விடுத்தார். இதற்குப் பதிலளித்த வேளாண்துறை இணை இயக்குநர், சவுக்கு மரக்கன்றுகளை வனத்துறையினரிடம் பெற்றுக்கொள்ளலாம் என்றார்.

வட்டார வளர்ச்சி அலுவலர் பாண்டுரங்கன், வட்டார வளர்ச்சி அலுவலர் (ஊராட்சி) கிருஷ்ணமூர்த்தி உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

## காளான் வளர்ப்பு பயிற்சி

First Published : 13 Jan 2010 03:24:09 AM IST
Last Updated :

சென்னை, ஜன.12: தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலக்கழகத்தின் சார்பில் காளான் வளர்ப்பு குறித்த ஒரு நாள் பயிற்சி சென்னையில் ஜனவரி 20}ம் தேதி நடைபெறவுள்ளது.

இல்லத்தரசிகள், மாணவர்கள் என அனைவரும் இதில் கலந்து கொள்ளலாம். பயிற்சி பெற விரும்புபவர்கள் தங்கள் பெயரை முன்பதிவு செய்து கொள்ள வேண்டும். முன்பதிவுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்: 044}2626 3484/ 4217 0506.

## இன்று முதல் புதிதாக 13 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் துவக்கம்

First Published : 12 Jan 2010 12:35:18 AM IST
Last Updated : 12 Jan 2010 10:26:39 AM IST

ஈரோடு, ஜன. 11: ஈரோடு மாவட்டத்தில் தற்போது உள்ள 7 நேரடி கொள்முதல் நிலையங்களோடு கூடுதலாக 13 நிலையங்கள் புதன்கிழமை (ஜன.12) முதல் செயல்படும் என்று ஆட்சியர் ஆர்.சுடலைக்கண்ணன் தெரிவித்தார்.

நடப்பு அறுவடை பருவத்தில் விவசாயிகளிடம் நேரடியாக நெல் கொள்முதல் செய்வதற்காக கோபி வட்டத்தில் காசிபாளையம், டிஎன்.பாளையம், நஞ்சகவுண்டம்பாளையம், கள்ளிப்பட்டி, கூகலூர், பவானி வட்டத்தில் அத்தாணி, சத்தி வட்டத்தில் நாகரணை ஆகிய 7 இடங்களில் நேரடி கொள்முதல் நிலையங்கள் செயல்பட்டு ருகின்றன.

இந்த கொள்முதல் நிலையங்களில் இதுவரை 3 ஆயிரத்து 173 டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.தற்போது அறுவப் ட பணிகள் தீவிரமடைந்துள்ளதை தொடர்ந்து கூடுதலாக நேரடி கொள்முதல் நிலையங்கள் தொடங்க வேண்டும் என்று விவசாயிகள் கோரினர். இதனையடுத்து ஈரோடு வருவாய் வட்டத்தில் அவல்பூந்துறை, எழுமாத்தூர், கொடுமுடி, சிவகிரி மற்றும் நசியனூர், பெருந்துறை வட்டத்தில் காஞ்சிக்கோயில், வெள்ளோடு, கே.ஜி.வலசு, பவானி வட்டத்தில் கவுந்தப்பாடி, பவானி, அம்மாபேட்டை, பி.மேட்டுப்பாளையம், சத்தி வட்டத்தில் உக்கரம் ஆகிய 13 இடங்களில் கூடுதலாக 13 கொள்முதல் நிலையங்கள் தொடங்கப்பட்டுள்ளது

விவசாயிகள் நுகர்பொருள் வாணிப கழகம் மூலம் அமைக்கப்பட்டுள்ள நெல் கொள்முதல் நிலையங்களில் நெல் விற்பனை செய்து அதிக விலை பெற்று பயனடையலாம் என்றார்.

**பவானிசாகர் அணை நீர்மட்டம்**

First Published : 12 Jan 2010 12:24:46 AM IST
Last Updated :

ஈரோடு, டிச.11: பவானிசாகர் அணை நீர்மட்டம் திங்கள்கிழமை 88.34அடியாக இருந்தது. விநாடிக்கு 1099 கன அடி வீதம் தண்ணீர் வந்தது. பாசனத்துக்கு வாய்க்காலில் விநாடிக்கு 2000 கன அடியும், ஆற்றில் விநாடிக்கு 700 கன அடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. நீர் இருப்பு 20 டிஎம்சி.

**தேசிய விருது பெற்ற வன அலுவலருக்குப் பாராட்டு**

First Published : 12 Jan 2010 12:30:48 AM IST
Last Updated :

கூடலூர், ஜன.11: தேசிய விருது பெற்ற வன அலுவலருக்குப் பாராட்டு விழா கூடலூர் கிளப்பில் திங்கள்கிழமை நடைபெற்றது.

நீலகிரி மாவட்டம் கூடலூர் நாடுகாணி கிராமத்தைச் சேர்ந்த பி.சிவக்குமார் பள்ளிப் படிப்பை குமரன் கல்வி நிறுவனம் மற்றும் அரசு மேநிலைப் பள்ளியில் படிப்பை முடித்து, தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழகத்தின் கீழ் இயங்கி வரும் மேட்டுப்பாளையம் வனக் கல்லூரியில் வனவியியல் இளநிலை மற்றும் முதுநிலை பட்ட மேற்படிப்பை முடித்து 2000-ஆம் ஆண்டில் இந்திய வனப் பணியில் அசாம்-மேகாலயா கேடரில் சேர்ந்தார்.

கடந்த 2006-ஆம் ஆண்டு அசாம் மாநில நவுகான் மாவட்டம் ஹெஜாய் என்ற இடத்தில் மாவட்ட வன அலுவலராகப் பணியில் அமர்த்தப்பட்டார். இம்மாவட்டம் கார்பி பிங்க்லாங் மற்றும் வடக்கு கச்சார் கவுன்சிலுக்கு இடையில் உள்ளது.

இங்கு மரம் வெட்டுதல், மரம் கடத்தல், வனவிலங்குகளை வேட்டையாடுதல் போன்ற குற்றங்களில் பலர் ஈடுபட்டு வந்தனர்.

சிவக்குமார் பதவியேற்றவுடன் வனம் மற்றும் வன விலங்குகளை பாதுகாப்பதின் முக்கியத்துவம் குறித்து கிராமமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தினார்.

காடுகளை அழித்த கிராமமக்களை வைத்தே காட்டையும், வன விலங்குகளையும் பாதுகாக்கும் பணியில் ஈடுபடுத்தினார்.

உலக வங்கி நிதியுதவியுடன் கிராம மக்களை வைத்து 1300 ஹெக்டேர் பரப்பில் காடுகளையும் உருவாக்கியுள்ளார்.

இரண்டு ஆண்டுகளில் கிராம மக்களுக்கு ரூ.19 லட்சம் வருவாயும் கிடைத்தது.

இவரது பணியை பாராட்டி அசாம் சட்டசபை இந்திய அரசின் வனப் பாதுகாப்புக்கான உயரிய விருதான இந்திரா பிரியதர்ஷினி விரிஷ மித்ரா விருதுக்கு பரிந்துரை செய்தது.

அசாம் வனத் துறையில் இந்த விருதை பெற்ற முதல் நபர் சிவக்குமார் ஆவார். இவர் பெற்ற இரண்டாவது தேசிய விருதாகும் இது.

இவரை பாராட்டி இவர் படித்த குமரன் கல்வி நிலையம் ஏற்பாடு செய்த பாராட்டு விழாவிற்கு முத்தமிழ் வளர்ச்சி மன்றத் தலைவர் அ.க.ஜெய்லாப்தீன் தலைமை வகித்தார். பாரதியார் பல்கலைக் கல்லூரி முதல்வர் டாக்டர் பி.அசோகன், தலைமை ஆசிரியர் ராஜகோபால், ராமகிருஷ்ணா மெட்ரிக் பள்ளித் தாளாளர் நடராஜன், நகர் மன்ற உறுப்பினர் ஜான்பால், ஓய்வு பெற்ற தமிழாசிரியர் ரத்னாவதி பார்த்தசாரதி, நூலகர் கிளமண்ட் மற்றும் இவருக்கு பாடம் கற்பித்த ஆசிரியர்கள், மாணவர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## புதுக்கோட்டை மாவட்டத்தில் 7 புதிய இறால் பண்ணைகள்

First Published : 12 Jan 2010 05:41:38 AM IST
Last Updated : 12 Jan 2010 11:29:00 AM IST

புதுக்கோட்டை, ஜன. 11: புதுக்கோட்டை மாவட்டத்தில் கடலோரப் பகுதிகளில் புதிதாக 7 இறால் பண்ணைகள் அமைக்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக மாவட்ட நிர்வாகம் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

புதுக்கோட்டை மாவட்டத்தில் கடலோரப் பகுதிகளில் உள்ள 78 உவர் நீர் இறால் பண்ணைகளில், 33 இறால் பண்ணைகள் சென்னையிலுள்ள இந்திய கடல்சார் நீர்வாழ் உயிரின வளர்ப்பு ஆணையத்தில் பதிவு செய்யப்பட்டு இயங்கி வருகின்றன.

இந்நிலையில், மாவட்ட ஆட்சியரின் ஆணையின்படி, மாவட்ட ஆளவீட்டுக் குழு அலுவலர்கள் 17 இறால் பண்ணைகளில் அண்மையில் ஆய்வு செய்தனர். இதில், முறையாக பண்ணை அமைந்திருந்த 15 இறால் பண்ணைகளுக்கு, இந்திய கடல்சார் நீர்வாழ் உயிரின வளர்ப்பு ஆணையத்திடம் பரிந்துரை செய்யப்பட்டது. பரிந்துரை செய்யப்பட்டதில் 7 பண்ணைகளுக்கு பதிவுச் சான்று கிடைத்தது.

இதையடுத்து, புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் திங்கள்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சியில் இறால் பண்ணைக்கான பதிவுச் சான்றிதழ்களை மாவட்ட ஆட்சியர் ஆ. சுகந்தி உரியவர்களிடம் வழங்கினார்.

ஆவுடையார்கோயில் எஸ்.ஆர்.எம். யூசுப், மணமேல்குடி எம்.ஏ, ஹசன், பட்டுக்கோட்டை எஸ்.வி. முருகேசன், எஸ். முகமதுகனி, எஸ். ஷேக்அலாவுதீன், அறந்தாங்கி எஸ். முகமது அம்சா ஆகியோரிடம் பதிவுச் சான்றிதழ்களைப் பெற்றுக் கொண்டனர்.

நாகப்பட்டினம் (நீர்வாழ் உயிரின வளர்ப்பு) மீன் துறை உதவி இயக்குநர் வ. சந்திரகாசன், மீன் துறை ஆய்வாளர் கி. திருநாவுக்கரசு ஆகியோர் உடனிருந்தனர்.

### மூலிகை கருத்தரங்கு

First Published : 13 Jan 2010 01:00:47 AM IST
Last Updated :

கோவில்பட்டி, ஜன.12: கோவில்பட்டி பசுமை இயக்கம் சார்பில் மூலிகை கண்காட்சி, மூலிகை விளக்க கருத்தரங்கு மற்றும் இயற்கை வள பாதுகாப்பு குறித்த கருத்தரங்கு ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

கோவில்பட்டி செக்கடித் தெரு 3ஆம் எண் எழில் புத்தக நிலைய வளாகத்தில் நடைபெற்ற இவ் விழாவுக்கு செம்மை நதிராசா தலைமை வகித்தார். கருத்தரங்கில், மூலிகை குறித்து காரியாப்பட்டி அரசு மருத்துவமனை சித்த மருத்துவர் பரிமலசெல்வன் விளக்கம் அளித்தார்.

கருத்தரங்கில் சிடார் நிறுவனத்தைச் சேர்ந்த தேவராஜ் மூலிகைகளை பார்வைக்கு வைத்திருந்தார். அரவிந்த் ஹெர்பல்ஸ் ரவிசங்கர் ராஜா குருமலையிலிருந்து மூலிகைகளை சேகரித்து கருத்தரங்கு நிகழ்ச்சியில் காண்பித்தார்.

நாகமல்லி, வெண்கொடி, வேலி, வில்வம், சிவகரந்தை, கருந்துளசி, மஞ்சள் கரிசலாங்கண்ணி, கொடுப்பை, ஆடாதொடை, அணுகு, ஆவாரை, வெட்டுகாயத்தளை, அரிவாள்மனைப் பூண்டு, நாயுருவி, தும்பை உள்ளிட்ட பல்வேறு மூலிகைகள் கண்காட்சியில் இடம்பெற்றிருந்தன.

ஏற்பாடுகளை துரைப்பாண்டி, ஆசிரியர் செங்குட்டுவன் மற்றும் சுவாமி விவேகானந்த சேவா சங்கத்தைச் சேர்ந்த நாகராஜன் ஆகியோர் செய்திருந்தனர்.

### ஜன.22-ல் குமரி மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம்

First Published : 13 Jan 2010 12:40:00 AM IST
Last Updated :

நாகர்கோவில், ஜன.12: கன்னியாகுமரி மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம் நாகர்கோவிலி0ல் ஆட்சியர் அலுவலகத்தில் இம் மாதம் 22-ம் தேதி பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறுகிறது.

மாவட்ட ஆட்சியர் தலைமையில் நடைபெறும் இந்த கூட்டத்தில் டிசம்பர் மாத விவசாயிகள் கோரிக்கை தின கூட்டத்தில் விவசாயிகளிடமிருந்து பெறப்பட்ட கோரிக்கை மனுக்களுக்கான பதில்கள் வழங்கப்படும். மேலும், விவசாயம் தொடர்பான கோரிக்கை மனுக்களும் ஆட்சியரால் நேரில் பெறப்படும். இந்த கூட்டத்தில் விவசாயிகள் திரளாக பங்கேற்க வேண்டும் என்று ஆட்சியர் அலுவலக செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மானிய விலையில் தெளிப்பு நீர் பாசனக்கருவி

First Published : 12 Jan 2010 12:26:23 AM IST
Last Updated :

ராசிபுரம், ஜன.11: ராசிபுரம் வட்டாரத்தில் வேளாண்மைத் துறை சார்பில், தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தில் பயறுவகை மற்றும் எண்ணெய் வித்து உற்பத்தி திட்டத்தின் கீழ் தெளிப்பு நீர் பாசனக் கருவி 50 சதம் மானியத்தில் வழங்கப்படுகிறது என ராசிபுரம் வேளாண்மை உதவி இயக்குனர் ந.சுப்பிரமணியம் தெரிவித்துள்ளார்.

ராசிபுரம் பகுதியில் குறைந்த அளவு மழை பெய்துள்ளதால், மானிய விலையில் தெளிப்பு நீர் பாசனம் பெற்று நிலத்தடி நீரை பயன்படுத்தி, பயறுவகை பயிரிடுமாறு தெரிவித்துள்ளார்.

## இரு புதிய உழவர் சந்தைகள் திறப்பு

First Published : 13 Jan 2010 12:23:37 AM IST
Last Updated :

திருவள்ளூர், ஜன. 12: திருவள்ளூர் மாவட்டத்தில் ஆவடி பருத்திப்பட்டு, நாரவாரிக் குப்பம் ஆகிய பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள புதிய உழவர் சந்தைகளின் திறப்பு விழா செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

விழாவுக்கு மாவட்ட ஆட்சியர் வெ. பழனிகுமார் தலைமை வகித்தார். மாவட்ட வேளாண் விற்பனைக் குழுவின் தலைவர் ராமகிருஷ்ணன் வரவேற்றார். திருவள்ளூர், வில்லிவாக்கம் தொகுதி எம்.எல்.ஏ.க்களான இ.ஏ.பி. சிவாஜி, ரங்கநாதன் ஆகியோர் புதிய உழவர் சந்தைகளை திறந்துவைத்து விவசாயிகளுக்கு அடையாள அட்டைகளை வழங்கினர்.

விழாவில் மாவட்ட ஆட்சியர் வெ. பழனிகுமார் தலைமை வகித்துப் பேசியதாவது: தமிழகத்தில் மொத்தம் 148 உழவர் சந்தைகள் உள்ளன. இன்று திறந்துவைக்கப்பட்ட உழவர் சந்தைகளுடன் 150 உழவர் சந்தைகள் தமிழகத்தில் உள்ளன. இம் மாவட்டத்தில் திருவள்ளூர், திருத்தணி, அம்பத்தூர் ஆகிய பகுதிகளில் உழவர் சந்தை செயல்பட்டு வந்தது. தற்போது ஆவடி பருத்திப்பட்டு, நாரவாரிக்குப்பம் ஆகிய பகுதிகளிலும் உழவர் சந்தை திறக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு உழவர் சந்தையும் 20 சென்ட் நிலத்தில் 22.50 லட்சத்தில் கட்டப்பட்டுள்ளது. ஒரு உழவர் சந்தையில் 24 கடைகள் கட்டப்பட்டுள்ளன. மேலும் நிறுத்துமிட வசதி, காய்கனிகள் சேமிப்பு கிடங்கு உள்ளிட்டவைகளும் இதில் உள்ளன. இங்கு வியாபாரம் செய்யும் விவசாயிகளுக்கு இலவச மின்சாரம், இலவச மின் தராசு மற்றும் பேருந்துகளில் சுமைக் கட்டணம் கிடையாது என்றார் அவர்.

செய்தி- மக்கள் தொடர்பு அலுவலர் ஸ்தனில்லாஸ் நன்றி கூறினார்.

தினமலர்

## தமிழகத்தில் மழை பெய்ய வாய்ப்பு


ஜனவரி 13,2010,00:00 IST

சென்னை:"வங்கக் கடலில் உருவான காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாக, தமிழகம் மற்றும் புதுச்சேரியில் இன்று மழை பெய்ய வாய்ப்பு உள்ளது' என, சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.தென்மேற்கு வங்கக் கடலில் புதிய காற்றழுத்த தாழ்வு நிலை, கடந்த 7ம் தேதி இலங்கைக்கும், தமிழகத்திற்கும் இடையே உருவானது. இதன் காரணமாக, தமிழகம் மற்றும் புதுச்சேரியில் பரவலாக மழை பெய்து வருகிறது. அதிகபட்சமாக, விழுப்புரத்தில் 2 செ.மீ., மழை பெய்தது.

சென்னை நகரில், கடந்த 7, 8 ஆகிய தேதியில் பரவலாக மழை பெய்தது. அதன் பின், சென்னை மற்றும் புறநகர்ப் பகுதியில் பனிப்பொழிவும், பகல் முழுவதும் வெயிலும் சுட்டெரிக்கிறது.இது குறித்து, சென்னை வானிலை ஆய்வு மைய அதிகாரி கூறுகையில் ,"தென்மேற்கு வங்கக் கடலில் உருவான காற்றழுத்த தாழ்வு நிலை, அதே இடத்தில் தொடர்ந்து நிலை கொண்டுள்ளது. இதன் காரணமாக, தமிழகம் மற்றும் புதுச்சேரியில் இடியுடன் கூடிய மழை பெய்யும். உள்மாவட்டங்களில் லேசான மழை பெய்யக் கூடும். சென்னை நகரில் வானம் மேகமூட்டமாக காணப்படும். ஒரு சில இடங்களில் லேசான மழை பெய்ய வாய்ப்பு உள்ளது' என்றார்.

## ஏறிக்கொண்டே போகிறது சர்க்கரை விலை : தடுக்க முடியாமல் அரசு தவிப்பு

ஜனவரி 13,2010,00:00 IST



புதுடில்லி : சர்க்கரை விலை, நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே போகிறது; அதைக் கட்டுக்குள் கொண்டுவர, "மத்திய அரசிடம் எந்தத் திட்டமும் இல்லை' என்று, பொருளாதார நிபுணர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

பாக்கெட்டுகளில் அடைக்கப்பட்ட சர்க்கரை, கிலோ 46 ரூபாய்க்கு விற்கப்படுகிறது; சாதா சர்க்கரை கிலோ 43 லிருந்து 44 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. இதே நிலை நீடித் தால், கிலோ 50 ரூபாயை தாண்டி விடும் நிலை உள்ளது.உணவு விலையேற்றம் 20 சதவீதம் உயர்ந்துள்ள நிலையில், சர்க்கரையில் விலையேற்றம் மத்திய அரசைக் கவலைகொள்ள வைத்துள்ளது. ஆனாலும் விலையைக் கட்டுக்குள் கொண்டுவர, மத்திய அரசிடம் எவ்விதத் திட்டமும் இல்லை என்பதுதான் தற்போதைய உண்மை.தற்போது அரசு வசம் இருக்கும், சர்க்கரையின் கையிருப்பு, பொதுவினியோகத் திட்டத்துக்கும் சேர்த்து இன்னும் ஒரு மாதத்துக்கு மட்டுமே வரும் என்று தகவல்கள் கூறுகின்றன.

வேறு கையிருப்பும் இல்லாத நிலையில், சர்க்கரை பற்றாக்குறை யை தீர்க்க இறக்குமதி செய்யவும் மத்திய அரசு தயங்கி வருகிறது. ஆனால், தனியார் நிறுவனங்கள் சர்க்கரையை தொடர்ந்து இறக்குமதி செய்து வருகின்றன.பண்டிகைக் காலம் முடிவடைந்து, திருமணக் காலம் தொடரும் சூழலில் சர்க்கரையின் விலை அதிகரிக்குமே தவிர, குறைய வாய்ப்பில்லை என்றுதான் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## 'தை பிறந்தால் வழி பிறக்கும் தங்கமே தங்கம்' : மஞ்சள் காப்புடன் பொங்கல் கொண்டாட்டம்

ஜனவரி 13,2010,00:00 IST



ஆடிப்பட்டம் தேடி விதை விதைத்து தை மாதத்தில் அறுவடை செய்து, தானியங்களை வீட்டிற்கு கொண்டு சேர்க்கும், தமிழர்களின் புனித மாதமாக தை கருதப்படுகிறது. ஆண்டு முழுவதும் கஷ்டப்படும் உழவர்களுக்கு தை மாதமே கைகொடுக்கிறது.

இதன் காரணமாகவே "தை பிறந்தால் வழி பிறக்கும்' என்பர். விவசாயம் விருத்தியாக தன்னையே எரித்து விவசாயிகளுக்காக அர்ப்பணிக்கும் சூரியபகவானை வணங்கும் விதமாக, மண் பானையில் மஞ்சள் காப்புடன் பொங்கல் வைத்து விவசாயிகள் நன்றி கடன் செலுத்துகின்றனர். தமிழர்களின் முக்கிய பண்டிகையில் பொங்கல் முதலிடம் வகிக்கிறது.

பழையன கழிதலும் புதியன புகுதலும்: தானியங்களை வீட்டிற்கு கொண்டு செல்வதற்கு முன் வீட்டை சுத்தம் செய்வர். பழைய பொருட்களை வெளியேற்றுவர். வீட்டிற்கு வர்ணம் பூசி மெருகேற்றுவர். பொங்கல் வைக்க தேவையான பாத்திரங்கள், அடுப்பை சுத்தம் செய்து தயார் நிலையில் வைப்பர். காட்டில் விளையும் தானியங்களை வீட்டிற்குள் கொண்டு செல்வர். "பொங்கல் கொண்டாட தயார்' என்பதை குறிக்கும் விதமாகவே போகிப்பண்டிகை அன்று வீட்டின் கூரையில் கூரைப்புல், வேப்பிலை, மஞ்சள் செடிகளை சொருகி அடையாளம் காட்டுகின்றனர். இந்த கூரைப்புல் என்பது சூரியபகவானை வரவேற்க "வீட்டின் கூரையில் தோரண வாயில்" கட்டுவதற்கு ஒப்பாகும்.

### தள்ளிப்போகிறது மஞ்சள் அறுவடை ஈரப்பதம், நோய் தாக்குதல் எதிரொலி

பேரூர் : விவசாய நிலத்தில் காணப்படும் ஈரப்பதம், நோய் தாக்குதல் காரணமாக மஞ்சள் அறுவடை பணிகள் ஸ்தம்பித்துள்ளன. தமிழர் திருநாளான பொங்கல் பண்டிகைக்கு கரும்பும், மஞ்சளும் அதிகம் விற்பனையாகும். தமிழகத்திலேயே ஈரோடு மாவட்டத்தில் தான் 15 ஆயிரம் ஹெக்டர் அளவில் அதிகமாக மஞ்சள் பயிரிடப்படுகிறது. பணப்பயிரான மஞ்சள் கோவை மாவட்டத்தில் தொண்டாமுத்தூர், மாதம்பட்டி, விராலியூர், நரசீபுரம், பூலுவபட்டி, ஆலாந்துறை பகுதிகளில் 500 ஏக்கர் பரப்பளவில் பயிரிடப்பட்டுள்ளது. நல்ல தண்ணீர் வசதி, தேவையான உரம், தண்ணீர் தேங்காத அளவுக்கு வடிகால் வசதி கொண்ட பூமியில் பயிரிட்டால், ஏக்கருக்கு 20 முதல் 25 குவிண்டால் வரை மஞ்சள் அறுவடையாகும். அறுவடை செய்யப்படும் மஞ்சள், வேக வைத்த பின் உலரச் செய்து பாலீஸ் செய்யப்பட்டு மார்கெட்டுக்கு சப்ளையாகிறது. கடந்த இரு ஆண்டுகளாக மஞ்சள் விலை வீழ்ச்சியடைந்ததாலும், தொழிலாளர் பற்றாக்குறை காரணமாகவும் பயிரிடும் பரப்பு புறநகரில் குறைந்துள்ளது. தற்போது, மஞ்சள் பயிரிட்டுள்ள விளைநிலங்களில் அதிகமான ஈரப்பதம் காணப்படுவதால், பயிரின் வளர்ச்சி பாதிக்கப்பட்டுள்ளது. மேலும், விளைநிலத்தில் மஞ்சள் முற்றாத காரணத்தால் அறுவடைப் பணி ஸ்தம்பித்து, அடுத்த மாதத்திற்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. தவிர, நோய் தாக்குதலும் அறுவடை பணியை பாதித்துள்ளது. இதனால், பொங்கல் பண்டிகை விற்பனைக்காக மார்க்கெட்டுக்கு சப்ளையாகும் மஞ்சள் அளவு பெரிதும் குறைந்துள்ளதாக, விவசாயிகள் தெரிவித்தனர்.

### வால்பாறையில் பலத்த மழை: தேயிலை தொழிலாளர் மகிழ்ச்சி

வால்பாறை : வால்பாறையில் நேற்று பெய்த கன மழையால் தொழிலாளர்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். வால்பாறையில் மழைப்பொழிவு குறைந்து பனிப்பொழிவு அதிகமானதால் எஸ்டேட்டுகளில் தேயிலை உற்பத்தி பாதிக்கப்பட்டது. சில எஸ்டேட்டுகளில் உறைபனியால் தேயிலை செடிகள் கருகின. இந்நிலையில் நேற்று மாலையில் வால்பாறை டவுன் மற்றும் எஸ்டேட் பகுதிகளில் இடைவிடாது பெய்த கன மழையால் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டது. எஸ்டேட் பகுதிகளில் பெய்த கன மழையினால் தொழிலாளர்கள் தேயிலை பறிக்க முடியாமல் தவித்தனர்.

நீண்ட இடைவெளிக்கு பிறகு வால்பாறையில் மழை பெய்துள்ளதால் தேயிலை உற்பத்தி அதிகரிக்க வாய்ப்புள்ளதாக தோட்ட அதிகாரிகள் தெரிவித்தனர்.

வால்பாறையில் தொடர்ந்து பெய்து வரும் கனமழை அணைகளின் நீர்பிடிப்பு பகுதிகளில் தண்ணீர் வரத்து அதிகரித்துள்ளது. மழைப் பொழிவு குறைந்த நிலையில் 160 அடி கொள்ளளவு கொண்ட சோலையாறு அணையின் நீர்மட்டம் நேற்று காலை 82.98 அடியாக இருந்தது.

அணைக்கு விநாடிக்கு 103 கன அடி தண்ணீர் வந்துகொண்டிருக்கிறது. அணையிலிருந்து மானாம்பள்ளி பவர் ஹவுஸ் வழியாக பரம்பிக்குளத்திற்கு 434 கன அடி தண்ணீரும், கேரள சோலையாறு பவர்ஹவுஸ்க்கு வினாடிக்கு 464 கன அடி தண்ணீரும் வெளியேற்றப்படுகிறது.

### உளுந்து விதைக்க முடியாமல் விவசாயிகள் வேதனை : பருவம் தவறி பெய்த மழையால் பாதிப்பு

காட்டுமன்னார்கோவில் : காலம் தவறிய மழையால் சம்பா சாகுபடியை தொடர்ந்து உளுந்து பயிர் விதைக்க முடியாமல் விவசாயிகள் தவித்து வருகின்றனர்.

காவிரி டெல்டா கடைமடை பகுதியான சிதம்பரம், காட்டுமன் னார்கோவில் பகுதியில் கடந்த சில ஆண்டுகளாகவே பருவம் தவறிய மழையாலும், வெள்ளத்தாலும் விவசாயிகள் கடுமையாக பாதிப்படைந்து வருகின்றனர். ஒவ் வொறு ஆண்டும் ஜூன் 12ம் தேதி மேட்டூரில் தண் ணீர் திறப்பது வழக்கம். ஆனால் கடந்த சில ஆண்டு களாக போதிய தண்ணீர் இல்லாத காரணத்தால் மேட்டூர் அணை திறப்பு தள்ளி போய் வருகிறது. இந்த ஆண்டும் காலதாமதமாகியதால் ஜூலை மாதம் துவங்க வேண்டிய சம்பா சாகுபடி அக் டோபர் மாதம் துவங்கியது. அந்த சமயத்திலும் கடைமடை பகுதி வரை தண் ணீர் சென்று சேராததால் விவசாயிகள் மிகுந்த சிரமத்திற்கிடையே இந்த சாகுபடியை தேற்றி வந்தனர்.

ஆனால் யாரும் எதிர்பாரத வகையில் ஏற்பட்ட புயல் சின்னத்தால் டிசம் பர் மாதம் தொடர் மழை பெய்தது. இதனால் சிதம்பரம் காட்டுமன்னார்கோவில் பகுதியில் பெரும் வெள்ளம் ஏற்பட்டது. இந்த சமயத்தில் பல ஆயிரம் ஏக்கரில் நெற்பயிர்கள் பூ விட்ட நிலையில் பாதிக் கப்பட்டன. தண்ணீர் வடிந்த நிலையில் புகையான் தாக்குதல், இளைசுருட்டு புழு தாக்குதல் என எஞ்சிய பயிர்களும் கடுமையாக பாதிக்கப்பட்டது. இதனால் விவசாயிகள் பூச்சிக் கொல்லி மருந்து அடித்து பயிரை ஓரளவு காப் பாற்றினர்.

விவசாயிகள் போராடி காப்பாற்றிய நெற்பயிர்கள் அறுவடைக்கு தயாராகும் நேரத்தில் கடந்த மூன்று நாட்களாக பெய்த மழையால் அறுவடை பணி பாதிக்கப்பட்டது. இப்பிரச்னை ஒருபுறம் இருக்க, உளுந்து பயிர் விதைப்பை துவக்கி இருக்க வேண்டிய நிலையில் வயல்களில் தண்ணீர் தேங்கியதால் இதுவரை உளுந்து விதைப்பு செய்ய முடியாமல் விவசாயிகள் தவித்து வருகின்றனர். எதிர்பாராமல் கடந்த வாரம் 3 நாள் பெய்த மழையால் உளுந்து விதைப்புக்கு ஏற்றார்போல் இருந்த நிலங்களில் தண்ணீர் தேங் கியது. தண்ணீர் தேங்கிய வயல்களில் இந்தியரத்தின் உதவியோடு அறுவடை செய்யும்போது நிலத்தில் இயந்திரம் புதைந்து உளுந்து பயிர் பாதிக்கப்படும். தண்ணீர் தேங்கிய வயல்களில் உளுந்து விதைக்க முடியாது. பொங்கல் பண்டிகை முன்பாக போகியின் போதே உளுந்து விதைப்பு நடக்கும். ஆனால் வயலில் தண்ணீர் தேங்கியுள்ளதால் உளுந்து விதைப்பு துவங்க காலதாமதமாகும் நிலை ஏற்பட்டுள்ளது. காலம் தாழ்த்தி உளுந்து விதைப்பதால் விளைச்சல் பாதிக் கும் நிலை உள்ளது. பெரும் சிரமத்திற்கிடையே சம்பா பயிரைக் காப்பாற்றி அறுவடைக்கு கொண்டு வந்த நிலையில் தற்போது மழை பெய்துள் ளதால் அறுவடையும் பாதிக்கப்படுவதுடன் அடுத்து உளுந்து பயிரும் விதைக்க முடியாத நிலை உருவாகியுள்ளதால் விவசாயிகள் வேதனையில் ஆழ்ந்துள்ளனர்.

**விதை உளுந்து கையிருப்பு இல்லை...:**கடந்த இரண்டு ஆண்டுகளாகவே உளுந்து விதைத்து அறுவடையின் போது தொடர்ந்து மழை பெய்தது. இதனால் உளுந்து பயிர் பாதிப்பு ஏற்பட்டதுடன், விவசாயிகளிடம் விதை உளுந்து கையிருப்பு இல்லாமல் தீர்ந்தது. இந்த முறை விதை உளுந்து எவ்வளவு விலையானாலும் பரவாயில்லை என்ற நிலையில் தனியாரிடம் வாங்கி வைத்திருந்த நிலையில் விதைக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. விவசாயிகளை கவலையில் ஆழ்த்தியுள்ளது.

### மீன்குஞ்சு வளர்ப்பு மையங்கள் அமைக்க விண்ணப்பங்கள் வரவேற்பு

கடலூர் : மீன் குஞ்சு வளர்ப்பு மையங் கள் அமைக்க விண்ணப் பங்கள் வரவேற்கப்படுகின்றன. இது குறித்து மீன்துறை <உதவி இயக்குனர் விடுத் துள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் கடலூர் மாவட்டத்தில் மீன்குஞ்சு வளர்ப்பு மையங்கள் புதியதாக அமைத்து 1.50 லட்ச ரூபாய் மானிய உதவி பெற தகுதிகள் உள்ள இரு பயனாளிகள் மீன் வளர்ப் போர்களிடமிருந்து விண் ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

ஒரு எக்டர் சொந்த நிலத்தில், புதிதாக தரமான நீர் கிடைக்கக்கூடிய வெள்ள பாதிப்பு இல் லாத, சாலை மற்றும் மின் இணைப்பு வசதிகள் உள் ளதாகவும், ஆண்டிற்கு 5 லட்சம் தேர்ந்த விரலிகள் உற்பத்தி செய்யக்கூடிய திறனில் அமைக்க வேண் டும். கடலூர் மாவட்ட மீன்வளர்ப்போர் வளர்ச்சி முகமையில் உறுப்பினராக இருத்தல் வேண்டும்.

இரு விண்ணப்பங்களுக்கு மேல் பெறப்பட் டால் விண்ணப்பங்களின் தகுதிக்கேற்ப மீன்துறை ஆணையர் சென்னை அல்லது அவரால் நியமிக்கப்படும் அலுவலரால் இறுதியாக இருவர் தேர்வு செய்யப்படுவர் விண்ணப்பங்கள் மற்றும் விவரங்களுக்கு மீன்துறை <உதவி இயக்குனரை தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு செய்திக்குறிப்பில் கூறப்பட் டுள்ளது.

## பொங்கலை முன்னிட்டு மஞ்சள் கொத்துக்கு கிராக்கி அறுவடை செய்யாமல் காலம் தாழ்த்தும் விவசாயிகள்

கோபிசெட்டிபாளையம்: மஞ்சளுக்கு ஏற்பட்டுள்ள கடுமையான விலை சரிவால், விளைந்த மஞ்சளை அறுவடை செய்யாமல் விவசாயிகள் காலம் தாழ்த்தி வருகின்றனர். இதனால், பொங்கல் பண்டிகையில் முக்கியமாக பயன்படுத்தப்படும் மஞ்சள் கொத்துக்கு கடுமையான கிராக்கி ஏற்படும் அபாயம் உள்ளது. ஈரோடு மாவட்டத்தில் கோபி வட்டாரத்தில் அரக்கன்கோட்டை, தடப்பள்ளி கீழ்பவானி பாசனப் பகுதிகளில் கரும்பு மற்றும் நெல்தான் அதிகளவில் பயிரிடப்பட்டு வந்தது. சென்றாண்டு மஞ்சள் குவிண்டால் ஒன்றுக்கு 13 ஆயிரம் ரூபாயை தாண்டி விலை அதிகரித்தது.

இருப்பு வைக்கப்பட்ட மஞ்சளுக்கு நல்ல மவுசு ஏற்பட்டது. மஞ்சள் விலை தொடர்ந்து அதிகரிக்கும் என விவசாயிகள் எதிர்பார்த்தனர். இதனால், கோபி அரக்கன்கோட்டை மற்றும் தடப்பள்ளி பாசனப் பகுதியில் சென்றாண்டு மஞ்சள் சாகுபடி அதிகரித்தது. ஆனால், இருப்பு மஞ்சள் அதிகளவில் குவியத் துவங்கியதால் விலை சரியத் துவங்கியுள்ளது.

வழக்கமாக தை மாதத்தில் மஞ்சள் அறுவடையை விவசாயிகள் துவங்குவது வழக்கம். ஆனால், புதிய மஞ்சள் விரலி ரகத்துக்கு 9,600 ரூபாயும், கிழங்கு மஞ்சளுக்கு 9, 400 ரூபாயும் அதிகப்பட்சமாக விவசாயிகளுக்கு விலை கிடைத்தது. இதனால், அதிர்ச்சியடைந்த, மஞ்சள் பயிரிட்டுள்ள விவசாயிகள் விலை உயர வாய்ப்புண்டு என்ற எண்ணத்தில், மஞ்சள் அறுவடைய தள்ளி வைத்துள்ளனர்.

கோபி, பங்களாபுதூர், கள்ளிப்பட்டி, துறையம்பாளையம், அத்தாணி, பாரியூர், சிறுவலூர், கொளப்பலூர், வாணிப்புத்தூர், டி,என்.பாளையம் உள்ளிட்ட பகுதிகளில் ஆயிரக்கணக்கான ஏக்கரில் சாகுபடி செய்யப்பட்ட மஞ்சள் முற்றிய நிலையில் அறுவடைக்கு தயாராக இருந்தும், விவசாயிகள் அறுவடை செய்யவில்லை. இதனால் மஞ்சள் முற்றிய நிலையில் மஞ்சள் பயிர்கள் சாயத் துவங்கியுள்ளன. தைப்பொங்கல் பண்டிகைக்கு ஸ்வாமி வழிபட, நிலத்தில் இருந்து அறுவடை செய்யப்பட்ட இலைகளுடன் கூடிய கொத்து மஞ்சளை பொதுமக்கள் பயன்படுத்துவது வழக்கம். மஞ்சளுக்கு ஏற்பட்டுள்ள விலை குறைவால், விவசாயிகள் விளைந்த மஞ்சளை அறுவடை செய்யாமல் உள்ளனர். இதனால், பொங்கல் பண்டிகைக்கு இலைகளுடன் கூடிய கொத்து மஞ்சளுக்கு கடும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. வழக்கமாக பொங்கல் பண்டிகைக்கு கொத்து மஞ்சள் ஒரு ஜோடி 10 ரூபாய் முதல் 15 ரூபாய் வரை விற்பனை செய்யப்படும். தற்போது, மஞ்சள் குவிண்டால் ஒன்றுக்கு 10 ஆயிரம் ரூபாய் வரை விற்பதாலும், அறுவடை செய்யப்படாததாலும் கொத்து மஞ்சள் விலை ஜோடி ஒன்று 50 ரூபாய் வரை விற்பனை செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## மரக்கன்றுகள் வழங்கும் விழா

திருப்போரூர் : சிறுசேரி சிப்காட்டில் உள்ள ஸ்டீரியா நிறுவனம் சார்பில், திருப்போரூர் பேரூராட்சிப் பகுதியில் 500 குடும்பத்தினருக்கு பழ மரக்கன்றுகள் வழங்கும் விழா நடந் தது. இயற்கை ஆர்வலர் வினோதன், மரக்கன்றுகளை பாதுகாத்தல் குறித்து விளக்கினார். சமுதாயப் பணிகள் துணைத்தலைவர் காயத்ரி, மரக்கன்றுகளை வழங்கினார். பேரூராட்சி செயல் அலுவலர் கேசவன் மற்றும் கவுன்சிலர்கள் கலந்து கொண்டனர்.

## பொங்கலையொட்டி கரும்பு விலை அதிகரிப்பு : காய்கறி உள்ளிட்ட இதர பொருட்களும் விலையேற்றம்

தடிக்காரன்கோணம்: பொங்கல் பண்டிகை நாளை (14ம் தேதி) நடக்கவுள்ள நிலையில் சந்தையில் விலைக்கு வந்துள்ள கரும்பின் விலை கடந்த ஆண்டைவிட ஒரு மடங்கு எகிறியுள்ளது. இதனால் பயனாளிகள் அதிர்ச்சியடைந்துள்ளனர். தமிழர் திருநாளான பொங்கல் பண்டிகையை அனைவரும் தமிழகத்தில் கொண்டாடுவர். கிராமபுறங்களில் விவசாயிகள் தங்கள் வயல்களில் கனிந்த நெல்லை சூரிய பகவானுக்கு படைத்து புது பானையில் பொங்கலிடுவர். பொங்கல் பொங்கிவரும் வேளையில் பெண்கள் இனிமையுடன் பொங்கலோ பொங்கல் என குலவையிடுவது வழக்கம். போகிப்பண்டிகைக்கு அடுத்த நாள் தமிழர் திருநாளான பொங்கல் பண்டிகையும் மறுநாள் மாட்டுப் பொங்கலும் நடக்கும். மாட்டுப் பொங்கலன்று விவசாயிகள் மாடுகளை தேய்த்து குளிப்பாட்டி அவைகளின் கொம்புகளை சீவி மூவர்ணம் பூசி, மாலை அணிவித்து பழம் உள்ளிட்ட பல்வேறு இனிப்புகளை வழங்கி கண்டுகளிப்பார்கள்.

அத்தப்பூ கோலத்திற்கு முக்கியப் பொருள் மலர்கள். அதுபோன்று பொங்கல் பண்டிகைக்கு முக்கியப் பொருளாக கரும்பு உள்ளது. இதை மேலூர், தேனி, மதுரை, தஞ்சாவூர் ஆகிய இடங்களிலிருந்து கட்டுக்கட்டாக லாரிகளில் ஏற்றி கொண்டு வரப்பட்டு கன்னியாகுமரி மாவட்டத்தில் விற்பனைக்கு வந்துள்ளது. கரும்பு விற்பனை 500 க்கும் அதிகமான ஊர்களிலுள்ள சாலையோரங்களில் விற்பனை செய்யப்படுகின்றன.

ஒரு கட்டில் 15 கரும்புகள் சிறியதும் பெரியதுமாக உள்ளன. கடந்த ஆண்டு பொங்கல் பண்டிகை துவங்கிய வேளையில் லாரிகளின் ஸ்டிரைக் காரணமாக 1 கட்டு கரும்பு 250 ரூபாய் வரை விற்பனையானது. லாரி ஸ்டிரைக் தீர்ந்தும் அதே 1 கட்டு கரும்பு விலை ரூ. 100 முதல் 120 ஆக வீழ்ச்சியடைந்தது. இந்த ஆண்டு இறக்குமதி செய்யப்பட்டுள்ள கரும்புகளின் 1 கட்டு விலை ரூ. 300 வரை விற்பனை செய்யப்படுகிறது. இந்த விலையேற்றம் சாதாரண மக்களிடையே அதிர்ச்சியை உண்டாக்கியுள்ளது.

பொன்னாகுடி, வல்லநாடு, தச்சநல்லூர், தசுழையூத்து ஆகிய பகுதிகளிலிருந்து கொண்டு வரப்பட்டுள்ள மஞ்சள் குலைகள் ரூ. 7 முதல் 12 வரை விற்பனை செய்யப்படுகிறது. இதுபோன்று 25 பனங்கிழங்கு கொண்ட 1 கட்டு ரூ. 60 வரை விற்பனையாகிறது. பொங்கலையொட்டி விற்பனைக்கு வந்துள்ள காய்கறிகளின் விலை சற்று உயர்ந்துள்ளது. குறிப்பாக முருங்கைக்காய் விலை பன்மடங்கு எகிறியுள்ளது. பல வீடுகளில் அலுமினிய பானைகளில் பொங்கலிட்டாலும் குமரி மாவட்டத்திலுள்ள ஏராளமான இந்து கோயில்களில் பொங்கலிடும் நிகழ்ச்சி நடக்கவுள்ளதால் மண்பானைகளின் விலையும் குறைந்தபாடில்லை. சந்தைகளில் குவிந்துள்ள பல சைஸ் மண்பானைகள், அடுப்புகளின் விலை கடந்த ஆண்டை விட 50 சதவீதம் உயர்ந்துள்ளது.
குமரி மாவட்டத்தின் அனைத்து சந்தைகளிலும் பொங்கல் பண்டிகையையொட்டி விற்பனைக்கு வந்துள்ள ஏத்தன், செவ்வாழை, மோரிஸ், மட்டி, ரசகதலி, துளுவன் உள்ளிட்ட பல்வேறு வகையான வாழைக்குலைகளின் விலையும் கடுமையாக எகிறியுள்ளது. குறிப்பாக 100 ஏத்தன் காய்களின் விலை ரூ. 500 ஐ தாண்டியுள்ளதால் பயனாளிகள் கவலைபட, விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

பொங்கல் பண்டிகையையொட்டி கோயில்கள் வண்ண விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளன. பல கிறிஸ்தவ கோயில்களிலும் பொங்கல் பண்டிகை கொண்டாடப்படவுள்ளன. பொங்கல் பண்டிகையையொட்டி குமரி மாவட்டத்திலுள்ள பல்வேறு விளையாட்டு மன்றங்கள், கபடி, கிரிக்கெட், கால்பந்து போன்ற விளையாட்டு போட்டிகளை நடத்தி பரிசுகள் வழங்கவுள்ளன. இதுபோன்று பல்வேறு கலை இலக்கிய மன்றங்கள் சார்பிலும் கலைப்பண்பாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்படவுள்ளன. கோயில்கள், விவசாயிகள் குடும்பங்கள், விளையாட்டு மன்றங்கள் மட்டுமின்றி இந்த பொங்கல் பண்டிகையை பல பள்ளி, கல்லூரிகளிலும் கொண்டாடுகின்றனர். குறிப்பாக தடிக்காரன்கோணம் ரூபன் கல்வி நிறுவனங்கள், மணலிக்கரை நிர்மலா ஐ.டி.ஐ., பூங்கரை என்.ஐ. தொழில்நுட்ப கல்லூரி, குமாரகோவில் என்.ஐ. கலை அறிவியல் கல்லூரி, பரைக்கோடு ஸ்ரீராமகிருஷ்ணா மெட்ரிக்குலேஷன் மேல்நிலைப் பள்ளி உள்ளிட்ட பல்வேறு கல்வி நிறுவனங்கள் சார்பிலும்

பொங்கல் பண்டிகையை கோலாகலமாக கொண்டாட உள்ளன.
தமிழகத்தில் காலாகாலமாக நடந்து வரும் பொங்கல் பண்டிகை சாதி, மத, மொழியுணர்வுகளுக்கு அப்பால் நடப்பதால் இதை சமய நல்லிணக்க விழாவாகவும் எடுத்துக்கொள்ளலாம்.

### குளச்சலில் கொழிசாளை மீன்கள் சிக்கியது

குளச்சல்,:குளச்சலில் நேற்று அதிக அளவு கொழிசாளை மீன் கிடைத்தது. இயற்கை துறைமுக நகரமான குளச்சலில் மீன்பிடி சீசன் துவங்கியதை அடுத்து கடந்த சில மாதங்களாக விசைப்படகுகளில் மீனவர்கள் மீன்பிடித் தொழில் செய்து வருகின்றனர். கடலுக்குள் சென்று 10 முதல் 15 நாட்கள் வரை தங்கி இத்தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். கடந்த சில நாட்களாக கடலில் பனிப்பொழிவு காரணமாக மீன்பிடித் தொழில் சற்று பாதிப்படைந்தது. இந்நிலையில் நேற்று கரை திரும்பிய விசைப்படகுகளில் கொழிசாளை மற்றும் கண்ணன்சாளை மீன்கள் அதிக அளவு பிடிபட்டிருந்தன.

### தாமதமான மழையால் 'வறட்சி' பொங்கல் விவசாயம் பாதிப்பு விலை உயர்வால் விவசாயிகள் தவிப்பு

மதுரை மாவட்டத்தில் 2009 ல் தென்மேற்கு பருவமழை பொய்த்தது. வடகிழக்கு பருவமழையும் தாமதமாகி, போதிய அளவு பெய்யவில்லை. வைகை அணை நிரம்பி உபரி நீர் திறந்துவிடப்பட்டும், முறைப்பாசனம் அமலில் உள்ளபோதும், பல பகுதிகளில் தண்ணீர் பற்றாக்குறை நிலவுகிறது. இதனால் பெரியாறு பாசன பகுதிகளான வாடிப்பட்டி, அலங்காநல்லூர், அழகர் கோவில், கள்ளந்திரி, மேலூர் பகுதியில் முதல் போக நெல் சாகுபடி நடக்கவில்லை. தற்போது இரண்டாம் போக சாகுபடி நடந்தாலும், மகசூல் கைகூடுவது சந்தேகமே? கண்மாய்கள் நிரம்பாததால், மானாவாரி பகுதிகளில் கிணற்று நீரை நம்பி சாகுபடி செய்கின்றனர். வறட்சி, விலைவாசி உயர்வு என பன்முனை தாக்குதலுக்கு இடையே, விவசாயிகள் இந்த தைத் திருநாளை எப்படி வரவேற்கின்றனர்?

மாவட்டத்தின் பல பகுதிகளில் நமது நிருபர்கள் வலம் வந்தபோது விவசாயிகளின் கருத்துக்கள்:

*துரைராஜ் (60) அய்யமுத்தான்பட்டி, மேலூர்: அறுவடை நடக்க வேண்டிய நேரத்தில், தற்போது தான் நெல்லில் பால் பிடித்து வருகிறது. அதற்குள் முறைப் பாசனம் வந்து விட்டதால், தண்ணீர் பற்றாக்குறை ஏற்படும் நிலை. வயலில் செலவு செய்த பணம் திரும்ப கிடைக்குமா? என்பது சந்தேகம்.தைப்பொங்கலுக்கு புத்தாடை வாங்குவோம். இம்முறை வாய்ப்பில்லை. விலைவாசி அதிகரிப்பால் பொங்கல் பொருட்களை வாங்குவதும் சிரமம். விவசாயத்திற்கு கடன் வாங்கி செலவு செய்துள்ளோம். பொங்கலை கொண்டாட, மேலும் கடன் வாங்கி சமாளிக்க வேண்டும்.

*ரங்கசாமி (48), ஸ்ரீரெங்காபுரம், உசிலம் பட்டி: பருவ மழை பொய்த்ததால் இறவையில் நெல் பயிரிட முடியவில்லை. தற்போது வீட்டுத்தேவைக்காக 30 சென்ட் நெல் பயிரிட்டுள் ளேன். பனியினால் குலை நோய் தாக்கும் அபாயம் உள்ளது. மானாவாரியில் மொச்சை, சோளம், கம்பு, போன்ற பயிர்களும் இம்முறை பயிரிட முடியவில்லை. கிணற்று நீரைக் கொண்டு குறைந்தளவு நிலக்கடலை, பிச்சிப்பூ பயிரிட்டுள்ளேன். தற்போது பிச்சிப்பூ கிலோ 500 ரூபாய்க்கு விற்கிறது. ஆனால், பூ விளைச்சல் குறைந்துள்ளது. அத்தியாவசிய பொருட்களின் விலை உயர்ந்துள்ளது. இந்த பொங்கலுக்கு புத்தாடைகள் வாங்கவில்லை. அரசின் இலவச வேட்டி, சேலையுடன் சமாளிக்கப்போகிறோம்.

*துரை (50), வாடிப்பட்டி: முன் ஏக்கருக்கு 35 முதல் 40 மூடை நெல் மகசூல் கிடைத்தது. தற்போது மழை, மண்வளம் குறைந்துவிட்டது. விவசாய செலவும் அதிகரித்துள்ளது. உறவினர்களை அழைத்து இரு நாட்கள் பொங்கல் கொண்டாடுவோம். தற்போது பொருளாதார நெருக்கடியால் அது சாத்தியமில்லை.

முதல்போக சாகுபடிக்கு கால்வாயில் தண்ணீர் கிடைக்கவில்லை. தற்போது இரண்டாம் போக நெல் சாகுபடியில் ஈடுபட்டுள்ளோம். கையிலிருந்த பணத்தை விவசாயத்தில் போட்டுள்ளோம். இந்நிலையில் பொங்கலை எப்படி மகிழ்ச்சியாக கொண்டாடுவது?

*கருப்பையா (95), மறவபட்டி,
பாலமேடு: இப்பகுதியில் பத்து ஆண்டுகளாக போதிய மழை இல்லை. முன் புது மணத்தம்பதியருக்கு பொங்கல் சீர்வரிசை கொடுப்பர். தற்போது வசதி படைத்தோரால் மட்டும்தான் அது முடியும். முன் தை முதல் நாளில் குல தெய்வம் கோயிலில் பொங்கலிவோம். மறுநாள் பொங்கலிட்டு மாடுகளுக்கு படைப்போம்.
குடும்பத்தினருக்கு மட்டுமல்லா மல், தோட்டத்தில் வேலை செய்வோருக்கும் புத்தாடைகள் வாங்கி கொடுப்போம். இம்முறை அது சாத்தியமில்லை.பொங்கலன்று பச்சை மொச்சை, முருங்கைக்காய் குழம்பு சாப்பிட்டால் தனி ருசி கிடைக்கும். ஆனால், இம்முறை இங்கு முருங்கைக்காய்களையே கண்ணில் காணோம்.

*வெள்ளைப்பாண்டி(45), சோளம்பட்டி, கள்ளிக்குடி: இப்பகுதியில் போதிய மழை இல்லை. சாகுபடி செய்த நெல் சாவியாகி வருகிறது. மானாவாரி விவசாயத்தில் சோளத்தைத் தவிர பிற பயிர்களில் லாபம் இல்லை. முன்பு விவசாயம் கால்நடைகளை சார்ந்திருந்தது. தற்போது இயந்திரங்களை நம்பி உள்ளது. நவீன விவசாயத்தை நம்பி பலனில்லை. விலைவாசி உயர்வால் பொங்கல் பொருட்களை வாங்க சிரமமாக உள்ளது. எளியமுறையில் பொங்கலை கொண்டாடுவோம்.

*வாசிமலை (51), எழுமலை: குறைந்தளவு மழை பெய்துள்ளது. உழைத்த உழைப்பிற்கு அதிக மகசூல் கிடைத்தால்தான், விவசாயிகளுக்கு உண்மையான பொங்கல். இனி மழை அதிகம் பெய்தால்தான், அதிக வருவாய் கிட்டும். நாங்கள் வழக்கம்போல் இம்முறை பொங்கல் கொண்டாடுவோம்.

*பவுன்சுந்தத்தேவர் (64) சிக்கம்பட்டி, செக்கானூரணி: தற்போது கூட்டுக்குடும்ப முறை சிதைந்ததால், குடும்பத்தினர் ஒன்று சேர்ந்து பொங்கலை கொண்டாடுவது குறைந்துள்ளது. வீரவிளையாட்டுகளும் மறைந்து வருகின்றன. விவசாயம் பாதித்துள்ளது. பெரும்பாலானோர் தங்கள் வீடுகளுக்கு வண்ணம் பூசவில்லை. புத்தாடைகள் வாங்க முடியாத நிலை. விலை உயர்வால், பொங்கல் பொருட்களை வாங்கும் அளவை குறைத்துள்ளோம். பொங்கலை எளிய முறையில் கொண்டாடுவோம்.

சின்னையன் (42), பாறைப்பட்டி: ஜூன் முதல் வாரத்தில் தண்ணீர் வந்தால்தான், இருபோகம் சாகுபடி செய்ய முடியும். தற்போது தாமதமாக தண்ணீர் வந்ததால், ஒருபோகம் கூட அறுவடை செய்ய முடியவில்லை. விவசாயத்தில் நஷ்டம் ஏற்படுவதால் இளைஞர்கள் ஆர்வம் காட்டுவதில்லை. அடுத்த தலைமுறையினர் விவசாயத்தை மறந்து விடுவர். இது எங்களுக்கு வறட்சிப் பொங்கல், என்றனர். மொத்தத்தில் விவசாயிகளை பொறுத்தவரை இப்பொங்கல் கசக்கிறது.

- -நிருபர்கள் குழு-

### மரக்கன்று நடும் திட்டம் மு.க.அழகிரி ஆய்வு

மதுரை: டில்லியில் உள்ளதைப் போல மதுரையில் 20 இடங்களில் நவீன இலவச கழிப்பறைகள் கட்டப்படுகின்றன. நேற்று பழங்காநத்தம், பெரியார் பஸ் ஸ்டாண்ட், மாட்டுத்தாவணி ஆகிய இடங்களில் கட்டப்படும் கழிப்பறை பணிகளை மத்திய அமைச்சர் மு.க.அழகிரி ஆய்வு செய்தார்.மதுரை நகரையும் மாவட்டத்தையும் பசுமையாக்கும் வகையில், இலவசமாக ஒரு லட்சம் மரக்கன்றுகள் நடப்பட உள்ளன. இன்று தெப்பக்குளத்தில் மரக்கன்றுகளை நட்டு, இத்திட்டத்தை அழகிரி துவக்கி வைக்கிறார். துவக்க விழா நடக்கும் இடத்தையும் அவர் பார்வையிட்டார். உடன், மக்கள் தொடர்பு அலுவலர்கள் சரவணன், ஆர்.பாஸ்கரன், மாநகராட்சி உதவி கமிஷனர்கள் தேவதாஸ்,

அங்கயற்கண்ணி, தி.மு.க., மாவட்ட செயலாளர்கள் மூர்த்தி, தளபதி, தலைமை செயற்குழு உறுப்பினர் சுரேஷ்பாபு, வனத்துறை, கல்வித் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### தேசிய வேளாண் பயிர் காப்பீட்டு திட்டம்

மதுரை : தேசிய வேளாண் பயிர் காப்பீட்டுத்திட்ட மேலாளர் அன்பரசு அறிக்கை: தேசிய பாதுகாப்புத் திட்டத்தின் கீழ், அனைத்து உணவுப் பயிர்கள், பயறு வகைகள், எண்ணெய் வித்துக்கள் மற்றும் வணிக தோட்டக் கலை பயிர்கள் காப்பீடு செய்யப்படுகிறது. குத்தகைதாரர்கள், வங்கிக்கடன் பெற்றோர், பெறாதோர் இதில் சேரலாம். சராசரி மகசூலின் மதிப் பில் 150 சதவீதம் வரை காப்பீடு செய்யலாம்.இயற்கைச் சீற்றத்தால் ஏற்படும் மகசூல் இழப்புக் காக, 116 கோடி ரூபாய் பிரீமியம் விவசாயிகளிடமே பெறப்பட்டது. 1171 கோடி ரூபாய் நஷ்ட ஈடாக வழங்கப்பட்டது. கடந்த ஆண்டு 18 மாவட்டங்களில் உள்ள 5 லட்சம் விவசாயிகளுக்கு, 651 கோடி ரூபாய் நஷ்ட ஈடு அளிக்கப் பட்டது. பயிர் கடன் பெற்ற விவசாயிகளிடம், வங்கிகளே பிரீமியத்தை வசூல் செய்கின்றன.

### சம்பா பயிரில் நெல்பழம் நோய் தாக்குதல் கட்டுப்படுத்த விவசாயிகளுக்கு யோசனை

நாகை: நாகை மாவட்டத்தில் சம்பா, தாளடி நெற்பயிரில் பரவிவரும் நெல்பழம் நோய் தாக்குதலைக் கட்டுப்படுத்தும் வழிமுறைகள் குறித்து விவசாயிகளுக்கு சிக்கல் வேளாண் அறிவியல் நிலையத் தலைவர் கவுதமன் யோசனை தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:நாகை மாவட்டத்தில் சம்பா, தாளடி நெற்பயிரில் அதிகளவு பனிப்பொழிவு மற்றும் மிகக்குறைந்த வெப்பநிலையால் நெல்பழம் நோய் வேகமாக பரவி வருகிறது. இந்நோய் ஒருவகை பூசனத்தினால் ஏற்படுகிறது. நெல்பழநோய் பால் பிடிக்கும் தருணம் முதல் முற்றிய நிலைகளில் உள்ள கதிர்களில் தாக்கி சேதம் விளைவிக்கிறது. இந்நோயின் பூஞ்சான வித்துக்கள் நெல் மணிகளில் முழுவதுமாக நிரம்பி இருக்கும். இந்நோயால் தாக்கப்பட்ட நெல்மணிகளின் வெளிப்பகுதி பசுமை நிறத்திலும், உட்பகுதி மஞ்சள் நிறம் கலந்த ஆரஞ்சு நிறமாகவும் காணப்படும். நோய் தாக்குதலால் நெல்மணிகளில் விதை மற்றும் தானியத்தின் தரம் வெகுவாக குறையும்.இந்நோய் வருமுன் தடுப்பதற்கு பயிர்கள் தண்டு உருளும் பருவம் மற்றும் 15 நாட்கள் கழித்து ஏக்கருக்கு சூடோமோனாஸ் என்ற எதிர் உயிர் பாக்டீரியா 1 கிலோ அல்லது காப்பர் ஹைட்ராக்ஸி குளோரைடு (கொசைடு) என்ற பூஞ்சானக் கொல்லி 600 கிராம் மருந்தை 200 லிட்டர் தண்ணீர் கலந்து கைத்தெளிப்பான் மூலம் தெளித்து கட்டுப்படுத்தலாம். இந்நோயை ஆரம்ப நிலையில் கண்டறிந்து நோய் தாக்கிய கதிர்களை எளிதாக அகற்றுவதின் மூலம் காற்றில் பூஞ்சான வித்துக்கள் மேலும் பரவுவதை தவிர்க்கலாம். நெற்பயிர் முற்றிய தருணத்தில் இருக்கும் போது ரசாயன பூஞ்சானக் கொல்லியை பயன்படுத்துவதை தவிர்க்க வேண்டும். நெல்பழம் நோயால் தாக்கப்பட்ட நெல்விதைகளை மீண்டும் நாற்று விதைப்புக்கு பயன்படுத்தக் கூடாது.

### மழையால் பாதித்த பயிர்களுக்கு நஷ்டஈடு வழங்க காங்., கோரிக்கை

வேதாரண்யம்: தொடர் மழையால் பாதித்த சம்பா பயிர்களுக்கு உரிய நஷ்டஈட்டு தொகை வழங்க வேண்டும் என்று காங்கிரஸ் கோரிக்கை விடுத்துள்ளது.இதுகுறித்து நாகை கலெக்டர் முனியநாதனுக்கு மாநில இளைஞர் காங்., பொறுப்பாளர் பி.வி.கே.பிரபு அனுப்பியுள்ள மனு:வார்டு புயல் சின்னம் காரணமாக வேதாரண்யம் பகுதியில் கடந்த மாதம் 13ம் தேதி முதல் 24ம் தேதி வரை தொடர் மழை பெய்தது. இதனால் வேதாரண்யம், தலைஞாயிறு பகுதி அரிச்சந்திரா நதி, மானங்கொண்டானாறு ஆகியவற்றில் அதிகளவில் தண்ணீர் ஓடியது. இதனால் வயல்களில் தேங்கிய நீர் வடிய முடியாத நிலை ஏற்பட்டது.வாய்மேடு, ஆயக்காரன்புலம், ஆதனூர், கருப்பம்புலம், வண்டல், குண்டூரானவெளி, பழையாற்றங்கரை உட்பட பல கிராமங்களில் வயல்களில் தண்ணீர் சூழ்ந்து சம்பா பயிர்கள் சேதம் அடைந்தது. இதேபோல் புகையிலை பயிர்களும் பாதிக்கப்பட்டது.எனவே விவசாயிகள் நலன் கருதி பாதிக்கப்பட்ட பகுதிகளை அதிகாரிகள் பார்வையிட்டு விவசாயிகளுக்கு உரிய நஷ்ட ஈட்டு தொகை வழங்குவதோடு பயிர் காப்பீடு இழப்பீடும் வழங்கவேண்டும்.

### ஜன., 19ல் வேளாண் அறிவியல் நிலையத்தில் மீன் வளர்ப்பு பயிற்சி

நாமக்கல்: "நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில் இம்மாதம் 19ம் தேதி நன்னீரில் கெண்டை மீன் வளர்ப்பு குறித்த ஒரு நாள் இலவச பயிற்சி நடக்கிறது' என, திட்ட ஒருங்கிணைப்பாளர் மோகன் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் வெளியிட்ட அறிக்கை: நன்னீரில் கெண்டை மீன் வளர்ப்பிற்கான இடங்கள் யாவை, வளர்ப்புக்கு எவ்வாறு இடம் தேர்வு செய்தல், மீன் குளம், மீன்களை இருப்பு செய்தல், மீன் வளர்ப்பில் தீவன மேலாண்மை, நீர் தர மேலாண்மை, நோய் மேலாண்மை மற்றும் பொருளாதாரம் ஆகியவை உள்ளிட்ட அனைத்து தொழில்நுட்ப பயிற்சியும் அளிக்கப்படும். இதில் விவசாயிகள், பண்ணையாளர்கள் உள்ளிட்டோர் பங்கேற்கலாம். விருப்பம் உள்ளோர் நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி வளாகத்தில் செயல்படும் வேளாண் அறிவியல் நிலையத்தில் 18ம் தேதிக்குள் பெயர் பதிவு செய்து கொள்ளலாம். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### கடல் பாசி வளர்ப்புக்கு 85 லட்சம் ரூபாய் கடனுதவி : மீன்துறை கமிஷனர் தகவல்

மண்டபம்: கடல்பாசி வளர்ப்பு குழுக்களுக்கு 85லட்சம் ரூபாய் வங்கி கடனுதவி வழங்கப்பட்டுள்ளது என மீன்துறை கமிஷனர் சம்பு கல்லோலிகர் கூறினார். ராமநாதபுரம் மாவட்டத்தில் கடல் தொழில் நசிந்து வரும் சூழலில், மீனவ சமுதாயத்தினர் சிறு குழுக்களாக சேர்ந்து கடல் பாசியான "கப்பாபைகஸ்' வளர்க் கின்றனர்.
கப்பாபைகஸ் மூலம் அல்ஜின், கேரோஜின் என்ற வேதிப்பொருட்கள் பெறப்படுகின்றன. கேரோஜின் உணவுப்பொருட்கள் மட்டுமல்லாது, அழகு சாதனப்பொருட்கள் என 154 வகையான பொருட்கள் தயாரிக்க பயன்படுகிறது. இதனால் கடல்பாசியான "கப்பாபைகஸ்' வளர்ப்பு தொழில் வங்கி கடனுதவி மூலம் தற்போது நடத்தப்படுகிறது. ராமநாதபுரம் மாவட் டத்தில் மண்டபம், தங்கச்சிமடம், பாம்பன், ராமேஸ்வரம் பகுதியில் 54 குழுக்கள் மூலம் வளர்க்கப்படுகிறது. இது குறித்து ஆய்வு செய்ய மீன்துறை கமிஷனர் சம்பு கல்லோலிகர் நேற்று கலெக்டர் ஹரிஹரனுடன் மண்டபம் வந்தார். ஆய்வுக்குபின் அவர் நிருபர்களிடம் கூறியதாவது:
சுனாமி நிதியின் கீழ் கடல்பாசி வளர்ப்பு குழுக்களுக்கு 85லட்சம் ரூபாய் வங்கி கடனுதவி வழங்கப்பட்டுள்ளது. சுய உதவிக்குழுக்கள் பாசி வளர்ப்பில், அதிக அளவில் ஈடுபட்டு வருகின்றனர்.குழுக்களால் வளர்க்கப்படும் பாசிகளுக்கு உரிய விலை கிடைக்கவில்லை,என்ற புகார் இருந்தது. தமிழ்நாடு மீன்துறை வளர்ச்சி கழகத்தின் மூலம் விலைகள் நிர்ணயம் செய்யப்பட உள்ளது. கனிமொழி எம்.பி., இத்துறையில் மிக ஆர்வமாக உள்ளதால் எதிர்காலத்தில் இப்பகுதி மக்களுடன் கலந்தாலோசிக்க உள்ளார். இனி வரும் காலகட்டத்தில் மகளிர் குழுக்கள் மேலும் கடல்பாசி வளர்ப்பு தொழிலில் ஈடுபட வாய்ப்புள்ளது. தடை செய்யப்பட்ட வலைகளை பயன்படுத்துபவர்கள் தண்டிக்கப்படுவார்கள். பேச்சாளை மீன்களை மொத்தமாக கொள்முதல் செய்து, பாதுகாப்பான முறையில் பயன்படுத்துவது குறித்து, தமிழக அரசு, டாடா சன்ஸ் குழுமத்துடன் இணைந்து செயல்படுவது குறித்த பேச்சுவார்த்தைகள் நடக்கின்றன, என, கூறினார். அக்வா-அக்ரி இயக்குனர் அபிராம்சேட், டாடா கன்சல்டன்ட் அக்வா கல்சர் பவுன்டேசன் ஆஃப் இந்தியா கன்சல்டன்ட் சக்திவேல், ஸ்டேட் பாங்க் முதன்மை மேலாளர் ரங்கசாமி, மீன் துறை இணை இயக்குனர் ஆறுமுகம் உடனிருந்தனர்.

### ரூ.500! குண்டு மல்லி கிலோ... பூக்கள் விலை கிடு...கிடு...

சேலம்: பொங்கல் பண்டிகையை முன்னிட்டு சேலம் பூ மார்க்கெட்டுக்கு பூக்களின் வரத்து அதிகரித்த நிலையிலும், தேவை அதிகரித்துள்ளதால், குண்டு மல்லி கிலோ 400 முதல் 500 ரூபாய் வரை விற்பனை செய்யப்பட்டது.

இந்த விலை இன்று மேலும் உயரும் என வியாபாரிகள் தெரிவித்தனர். சேலம் பூ மார்க்கெட்டுக்கு தினந்தோறும் மூன்று டன் முதல் ஐந்து டன் பூக்கள் விற்பனைக்கு வருவது வழக்கம். இரண்டு மாதமாக சேலம் மாவட்டத்தில் அதிகாலையில் பனி பொழிவின் தாக்கம் அதிகரித்துள்ளதால், விற்பனைக்கு வந்து கொண்டிருந்த பூ வரத்து பாதியாக குறைந்து விட்டது. நேற்று ஒரு டன் பூ மட்டுமே விற்பனைக்கு வந்தது. அதனால் பூக்களின் விலையில்

முன் எப்போதும் இல்லாத அளவுக்கு கடும் உயர்வு ஏற்பட்டது. கடந்த வாரம் 30 ரூபாய்க்கு விற்ற சாமந்தி, நேற்று 40 ரூபாய்க்கும், 200 ரூபாய்க்கு விற்ற குண்டு மல்லி, 500 ரூபாய்க்கும், 200 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்ட ஜாதி மல்லி, 240 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்பட்டது.

அரளி விலை ஐந்து மடங்கு உயர்ந்து கிலோ 120 ரூபாய்க்கும், காக்கட்டன் கிலோ 240 ரூபாய்க்கும், முல்லை 50 முதல் 60 ரூபாய் வரையும் விற்பனை செய்யப்பட்டது. மூட்டை 100 ரூபாய்க்கு விற்பனையான கலர் சாமந்தி 500 ரூபாய்க்கு விற்பனை ஆனது. பூ விலை அதிகரித்த போதிலும் சிறுவியாபாரிகள் அவற்றை அதிக விலை கொடுத்து வாங்கி சென்றனர். இது குறித்து சேலம் மொத்த பூ வியாபாரி செந்தில்குமார் கூறியதாவது:

கடந்த ஆண்டை ஒப்பிடுகையில் தற்போது பூ விளைச்சல் அதிகரித்து உள்ளது. அதே நேரத்தில் வெளி மாவட்டங்களில் பூ சாகுபடி செய்யும் விவசாயிகள் கல்யாண சீஸன் துவங்கும் ஆவணியில் பூக்கள் அறுவடைக்கு வரும் வகையில் பயிர் செய்துள்ளனர். தற்போது வெளி மாவட்ட பூக்களின் வரத்து முற்றிலும் நின்றுவிட்டது. பொங்கல் பண்டிகை என்பதால் பூ விலையில் உயர்வு ஏற்பட்டுள்ளது. இந்த உயர்வும் தற்காலிகமானதே, இன்னும் இரண்டு வாரங்களில் வெளி மாவட்டங்களில் இருந்து பூ விற்பனைக்கு வரும் என்று எதிர்பார்க்கிறோம். அப்போது பூக்களின் விலை குறையும். பொங்கல் பண்டிகை என்பதால் நாளை (இன்று) பூ விலையில் கடும் உயர்வு ஏற்படும் என எதிர்பார்க்கிறோம். இவ்வாறு அவர் கூறினார்.

### மரக்கன்று நடும் விழா

காரைக்குடி: உழவர் தினவிழவை முன்னிட்டு கல்லல் ஒன்றியம் கொங்கரத்தியில், இப்கோ நிறுவனம் சார்பில் மரக்கன்று நடும் விழா நடந்தது. சுந்தரம் எம். எல்.ஏ., துவக்கி வைத்தார். விவசாயிகளுக்கு கன்றுகள் வழங்கப்பட்டன. வட்டார தலைவர் நாராயணன், மகளிர் மன்ற நிர்வாகிகள் சுதா, உமாதேவி பங்கேற்றனர்

### 16 லட்சம் டன் நெல் கொள்முதல் செய்ய இலக்கு

நுகர்பொருள் வாணிப கழக நிர்வாக இயக்குனர் தகவல் தஞ்சாவூர்: தஞ்சை, திருவாரூர், நாகை மாவட்டங்களில் உள்ள நெல் கொள்முதல் நிலையங்கள், குடோன்கள் போன்றவைகளை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழக நிர்வாக இயக்குனர் வீரசண்முகமணி நேரில் ஆய்வு செய்தார். தஞ்சாவூரில் அதிகாரிகளுடன் ஆலோசனைக்கூட்டம் நடத்தினார். அதன்பின், நிர்வாக இயக்குனர் வீரசண்முகமணி நிருபர்களிடம் கூறியதாவது:

தமிழகத்தில் கடந்த 2008 -09ம் ஆண்டு கரிப் பருவத்தில் ஆயிரத்து 300 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் மூலம் 17.93 லட்சம் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டது. இந்தாண்டும் முழுமையாக நெல் கொள்முதல் செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. கடந்தாண்டைவிட இந்தாண்டு குறுவை பருவ நெல் கொள்முதல் பாதிக்கப்பட்டுள்ளது. இதை சம்பா பருவத்தில் ஈடுகட்டலாம் என எதிர்பார்க்கிறோம். தற்போது அரசு ஊக்கத்தொகை 50 ரூபாய் உயர்த்தி, அமல் செய்ததால் சாதாரண ரக நெல் குவிண்டால் ஆயிரத்து 50 ரூபாய்க்கும், சன்னரக நெல் குவிண்டால் ஆயிரத்து 100க்கும் கொள்முதல் செய்யப்படுகிறது. கொள்முதல் நிலையங்களில் மின்னணு தராசு, ஈரப்பதமானி, கோணிப்பைகள் தயார் நிலையில் உள்ளது. நல் கொள்முதல் செய்யப்பட்டதும் நகர்வுப்பணிகள் மேற்கொள்ள லாரி உரிமையாளர்களுடன் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. ரயில் மூலமும் அனுப்ப ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதால், அந்தந்த பகுதியில் உள்ள திறந்த வெளி குடோன்கள், கழகத்துக்கான குடோன்களில் இறக்கப்படும். தவிர, வெளி மாவட்டங்களுக்கும் கொண்டு செல்லப்படும். மேலும், அரசு மற்றும் தனியார் அறவை மில்களில் அரிசியாக்கப்பட்டு பொது விநியோகத்திட்டத்துக்கும் கொண்டு செல்லப்படும். தமிழகத்தில் 2009 - 10ம் ஆண்டு கரிப் பருவத்தில் (2009 அக்., ஒன்று முதல் 2010 செப்., 30 வரை) 16 லட்சம் டன் கொள்முதல் செய்யவும், அதில் தஞ்சை, திருவாரூர் மாவட்டங்களில் தலா ஐந்து லட்சம் டன், நாகை மாவட்டத்தில் மூன்று லட்சம் டன் என 13 லட்சம் டன் கொள்முதல் செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதற்கு ஆயிரத்து

700 முதல் ஆயிரத்து 800 கோடி ரூபாய் தேவைப்படும். இதற்காக மாவட்ட வாரியாக தஞ்சை 360, திருவாரூர் 370, நாகை 230 நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன. தேவைக்கு ஏற்ப கூடுதல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்படும். டெல்டா தவிர விவசாயிகளின் வேண்டுகோளுக்கு ஏற்ப, அதிக நெல் கொள்முதல் செய்வதன் அடிப்படையில் ஈரோடு மாவட்டத்தில் 20 இடங்கள், திருவள்ளூரில் சில இடங்களிலும் நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளது. தேவைக்கு ஏற்ப மாநிலத்தில் பிற பகுதிகளில் திறக்கப்படும். மத்திய அரசின் பரவலாக்கப்பட்ட நெல் கொள்முதல் திட்டத்தில் தமிழக அரசு கொள்முதல் செய்வதால் ஈரப்பதம் 17 சதவீத்தில் கொள்முதல் செய்யப்படுகிறது. இதை உயர்த்த கேட்டுள்ளோம். மத்திய நிபுணர் குழுவினர் ஆய்வு செய்து ஈரப்பதத்தை உயர்த்த அறிவிப்பார்கள். இவ்வாறு அவர் கூறினார். ""கொள்முதலுக்கான பணம் கமிஷன் வழங்கப்படாமல் விவசாயிகளுக்கு முழுமையாக சென்றடைய செக், போஸ்ட் ஆபீஸ் மூலம் வழங்கலாம்," என கேட்டபோது, ""விவசாயிகள் பணமாக பெற விரும்புகின்றனர். கமிஷன், பிடித்தங்கள் இன்றி முழுமையாக விவசாயிகளுக்கு பணம் சென்றடைய வேண்டும் என்பதே எங்கள் நோக்கம். இதை கண்காணிக்க பறக்கும்படை, முதுநிலை மண்டல மேலாளர் நிலையில் அதிகாரிகள் நியமித்துள்ளோம். தவறு நடக்காமல் பார்த்துக் கொள்ள முயற்சி மேற்கொள்ளப்படும்," என்றார்.

### பயிர் காப்பீடு இழப்பீடு வழங்க விவசாயிகள் சங்கம் ஆர்ப்பாட்டம்

கும்பகோணம்: "கடந்த ஆண்டு பயிர் காப்பீடு செய்த விவசாயிகளுக்கு மத்திய அரசு இழப்பீட்டை உடனே வழங்க வேண்டும்' என வலியுறுத்தி தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தினர் கண்டன ஆர்ப்பாட்டம் செய்தனர். கும்பகோணம் தலைமை தபால் அலுவலகம் முன் நடந்த ஆர்ப்பாட்டத்திற்கு தமிழ்நாடு விவசாயிகள் சங்க திருப்பனந்தாள் ஒன்றிய செயலாளர் காசிநாதன் தலைமை வகித்தார்.

ஆர்ப்பாட்டத்தில், கடந்த 2008 ஆண்டு விவசாயிகள் பயிர் காப்பீடு செய்திருந்தனர். இந்லையில் ஷா புயலின் காரணமாக பாதிக்கப்பட்ட பயிர்களுக்கு காப்பீடு தொகை வழங்குவதாக அரசு அறிவித்தது. இதில் மால அரசு தனது பங்கை விவசாயிகளுக்கு வழங்கி விட்டது. ஆனால் மத்திய அரசு தனது பங்குத் தொகையை வழங்காமல் காலம் தாழ்த்தி வருவதை கண்டித்து ஆர்ப்பாட்டத்தில் வலியுறுத்தப்பட்டது. ஆர்ப்பாட்டத்தில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட செயற்குழு உறுப்பினர்கள் நடராஜன், சின்னை.பாண்டியன், கும்பகோணம் ஒன்றிய செயலாளர் நாகராஜன், நகர செயலாளர் பார்த்தசாரதி உள்பட பலர் கண்டன உரையாற்றினர். ஆர்ப்பாட்டத்தின் போது விவசாயிகள் கையில் நெற்பயிரோடு கலந்து கொண்டு ஆர்ப்பாட்டம் செய்தனர்.

### மண்புழு உரத்தை பயன்படுத்தினால் பாறையான மண் கூட இலகுவாக மாறும் : தூத்துக்குடி விவசாயிகள் பயிற்சியில் தகவல்

தூத்துக்குடி: மண்புழு உரத்தை பயன்படுத்தினால் திடமான பாறை போன்ற மண் கூட இலகுவாகிவிடும். இதனால் மண்புழு உரத்தை அதிகமாக பயன்படுத்த வேண்டும் என்று தூத்துக்குடி உழவர்சந்தையில் நடந்த பயிற்சியில் வலியுறுத்தப்பட்டது. தூத்துக்குடி உழவர்சந்தைக்கு காய்கறிகள் கொண்டு வரும் விவசாயிகளுக்கு வேளாண் வணிகத்துறை சார்பில் மண்புழு உரம் குறித்த பயிற்சி நடந்தது. இந்த பயிற்சியில் மாப்பிள்ளையூரணி, பண்டாரம்பட்டி ஆகிய கிராமங்களில் உள்ள அதிகமான விவசாயிகள் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர். வேளாண் வணிகத்துறை துணை இயக்குநர் முருகானந்தம் தலைமை வகித்தார். தூத்துக்குடி உழவர்சந்தை நிர்வாக அதிகாரி தாமஸ் வரவேற்றுப் பேசினார். விவசாயிகள் விளைபொருட்களுக்கு அதிகமாக மண்புழு உரம் பயன்படுத்த வேண்டும் என்பதை வலியுறுத்தி வேளாண்மை உதவி இயக்குநர் ஜெயசுந்தர் தொழில் நுட்ப செய்திகளை தெரிவித்தார். கூட்டத்தில் விவசாயிகளுக்கு மண்புழு உரம் பயன்படுத்தினால் என்னென்ன பயன்கள் கிடைக்கும் என்பது குறித்து செயல்முறை விளக்கம் செய்து காட்டப்பட்டது. கூட்டத்தில் விவசாயிகளுக்கு தெரிவிக்கப்பட்ட விபரம் வருமாறு; கடினமான மண்களை கூட மண்புழு உரம் போட்டால் அந்த மண் இலகுவாகிவிடும். மண் நல்ல இலகுவாகினால் அந்த மண்ணில் செய்யப்படும் பயிர்களுக்கு நல்ல மகசூல்

கிடைக்கும். மண்புழு உரம் மூலம் அந்த மண்ணுக்கு நல்ல ஊட்டமும் கிடைக்கும். மண்புழு உரத்தை உழவர்சந்தையிலே தயார் செய்யலாம். உழவர்சந்தையில் தினமும் ஒரு டன் கழிவுகள் சேர்கிறது. இந்த காய்கறி கழிவுகள் மூலம் மண்புழு உரம் தயாரிக்கலாம். இதற்காக விவசாயிகள் குழுவாக சேர்ந்து மண்புழு உரம் தயாரிக்க முன்வரலாம். அதற்கு வேண்டிய அனைத்து உதவிகளும் வேளாண் வணிகத்துறை மூலம் செய்யப்படும். இதனால் ஆர்வத்துடன் விவசாயிகள் மண்புழு உரம் தயாரிக்க முன் வரவேண்டும். இவ்வாறு விவசாயிகளுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. வேளாண்மை அதிகாரி மார்டின் ராணி நன்றி கூறினார்.

## தூத்துக்குடி விவசாயிகளுக்கு குறித்த காலத்தில் இடுபொருள் கிடைக்க முன்னுரிமை, முக்கியத்துவம் : புதிய வேளாண்மை இணை இயக்குநர் உறுதி

தூத்துக்குடி: தூத்துக்குடி மாவட்ட புதிய வேளாண்மை இயக்குநராக லூயிஸ் ராஜரத்தினம் பொறுப்பேற்றார். குறித்த காலத்தில் விவசாயிகளுக்குரிய இடுபொருட்கள் கிடை ப்பதற்கு முக்கியத்துவம் மற்றும் முன்னுரிமை அளிக்கப்படும் என்று அவர் தெரிவித்தார். தூத்துக்குடி மாவட்ட வேளாண்மை இணை இயக்குநராக நெல்லை மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் வேல்சாமி கூடுதல் பொறுப்பாக இருந்து வந்தார். தற்போது நெல்லை கலெக்டரின் நேர்முக உதவியாளராக (வேளாண்மை) பணியாற்றி வந்த லூயிஸ் ராஜரத்தினம் பதவி உயர்வு பெற்று தூத்துக்குடி மாவட்ட வேளா ண்மை இணை இயக்குநராக நியமிக்கப்பட்டுள்ளார். புதியதாக நியமனம் செய்யப்பட்ட அவர் நேற்று முன்தினம் தூத்துக்குடி மாவட்டத்தில் பொறுப்பேற்றார். பொறுப்பேற்றவுடன் வேளாண்மை அதிகாரிகள் அனைவரையும் அழைத்து ஆலோசனை நடத்தினார். ஆத்மா திட்ட நோடல் அதிகாரி ஜோசப்நஸ்ரேன் பிரேம் மற்றும் வேளாண்மை அதிகாரிகள் கலந்து கொண்டனர். பின்னர் புதிய வேளாண்மை இணை இயக்குநர் கூறியதாவது; தூத்துக்குடி மாவட்டத்தில் வேளாண்மைத்துறை திட்டங்கள் அனைத்தும் நல்ல முறையில் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அந்த திட்டங்கள் அனைத்தையும் வரும் மார்ச் மாதத்திற்குள் முடிப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். விவசாயிகளுக்கு கிடைக்க வேண்டிய இடுபொருட்கள், அரசு மானியங்கள் உள்ளிட்ட அனைத்தும் அந்தந்த கால கட்டத்தில் கிடைத்தால் தான் அவர்களுக்கு பயன் அளிக்கும். இதன் மூலம் நல்ல மகசூல் வரும். மாவட்டத்தில் உணவு உற்பத்தியும் அதிகரிக்கும். இதனால் விவசாயிகளுக்கு குறித்த காலத்தில் கிடைக்க வேண்டிய அனைத்தையும் அந்த காலத்திற்குள் கிடைக்க ஏற்பாடு செய்வேன். இதற்கு தான் முன்னுரிமையும், முக்கியத்துவமும் அளிக்கப்படும்.
என்.ஏ.டி.பி மற்றும் என்.எப்.எஸ்.எம் திட்டத்தின் கீழ் பல்வேறு பணிகள் நடந்து வருகிறது. இந்த திட்டங்களும் முன்னுரிமையுடன் சிறப்பாக செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு இணை இயக்குநர் தெரிவித்தார்.

## தரிசுநிலங்களில் தேனீ வளர்ப்பு வேளாண்மை கல்லூரியில் பயிற்சி

வல்லநாடு: தரிசு நிலங்களில் தேனீ வளர்ப்பது பற்றிய பயிற்சி கிள்ளிகுளம் வேளா ண்மை கல்லூரியில் நடந்தது. தரிசு நிலங்களிலும் தேனீ வளர்க்க முடியும் என்ற தலைப்பில் உழவர்களுக்கும், பொதுமக்களுக்கும் தொடர்ச்சியாக பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. பயிர் பாதுகாப்பு துறையை சேர்ந்த விஞ்ஞானிகள் பயிற்சியில் பல தொழில்நுட்பங்களையும், விளக்கங்களையும் செய்து காட்டினர். அவைகளில் பூக்களே இல்லாத இடங்களிலும் தேனீ வளர்க்க முடியும் என்பது குறிப்பிடத்தக்கது. கூட்டுக்குள் எறும்பு ஏறாமல் தடுக்க எளிய எண்ணெய் தாள்முறை, மழை காலத்தில் எப்படி ஈக்களை பெருக்குவது, புதிய ராணியை எவ்வாறு உற்பத்தி பண்ணுவது என்பது குறித்து பயிற்சி வழங்கப்பட்டது. பயிற்சிக்கு தலை மை வகித்த கல்லூரி முதல்வர் ராஜராஜன் பதிவு செய்தோருக்கு தேனீ குடும்பங்களையும், சிறிய தேன் எடுக்கும் கருவியையும் வழங்கினார். இனிமேல் பயிற்சியானது 3 மாதங்களுக்கு ஒரு முறை இரண்டாவது செவ்வாய்கிழமை முன்பதிவு செய்தோருக்கு மட்டும் நடத்த முடிவெடுக்கப்பட்டுள்ளது. அடுத்த பயிற்சி மார்ச் மாதம் இரண்டாவது செவ்வாய்கிழமை காலை 10 மணிக்கு கல்லூரியில் நடைபெறும்.

## பொங்கல் விழாவை ஒட்டி இன்று 24 மணிநேரம் தூத்துக்குடி உழவர்சந்தையில் காய்கறி விற்பனை : இன்று முதல் பசும்பால் விற்பனை துவக்கம்

தூத்துக்குடி:பொங்கல் திருநாளை முன்னிட்டு மக்கள் பயன் பெறும் வகையில் உழவர்சந்தை இன்று 24 மணி நேரமும் செயல்படும். இன்று முதல் முதலாக சுத்தமான பசும்பால் விற்பனையும் இங்கு துவக்கப்படுகிறது. தூத்துக்குடி புதிய பஸ் ஸ்டாண்டில் செயல்பட்டு வரும் உழவர்சந்தைக்கு நாளுக்கு நாள் மக்கள் கூட்டம் அதிகமாக வந்து கொண்டிருக்கிறது. அதற்கு ஏற்ப உழவர்சந்தையில் புதிய, புதியதாக பொருட்கள் விற்பனையும் அறிமுகப்படுத்தப்பட்டு வருகிறது. ஒவ்வொரு நாளும் காய்கறி விற்பனை டன் கணக்கில் நடந்து வருகிறது. கடந்த சில நாட்களுக்கு முன்பு காளான் சூப் விற்பனை இங்கு துவக்கப்பட்டது. அதோடு காளான், காளான் பவுடர் உள்ளிட்ட பொருட்களும் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. வேளாண் வணிக பால் உற்பத்தியாளர் குழு மூலம் இன்று முதல் உழவர்சந்தையில் சுத்தமான பசும்பால் விற்பனை துவக்கப்படுகிறது. காலை 6 மணியில் இருந்து தொடர்ந்து பால் விற்பனை நடக்கும். மக்களின் தேவைக்கு ஏற்ப பால் கொண்டு வருவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாக தூத்துக்குடி உழவர்சந்தை நிர்வாக அதிகாரி தாமஸ் தெரிவித்தார்.
இது குறித்து அவர் கூறியதாவது; பொங்கல் திருநாளை ஒட்டி உழவர்சந்தை இன்று 24 மணி நேரமும் செயல்படும். பொங்கல் அன்றும் உழவர்சந்தை செயல்படுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பொங்கலுக்கு உழவர்சந்தைக்கு காய்கறிகள் வாங்க வரும் பொதுமக்கள் தேவைக்கு அனைத்து வகை காய்கறிகளும் தட்டுப்பாடு இல்லாமல் கிடைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. கேரட், பீட்ரூட், முட்டைக்கோஸ் போன்ற அனைத்து மலை காய்கறிகளும் போதிய அளவிற்கு கொண்டு வரப்பட்டிருக்கிறது. தொடர்ந்து லாரிகளில் உழவர்சந்தைக்கு காய்கறிகள் வந்து கொண்டிருக்கும். தூத்துக்குடி மாவட்டத்தில் ஓட்டப்பிடாரம், பசுவந்தனை, புதியம்புத்தூர், புதுக்கோ ட்டை, குளத்தூர், தெய்வச்செயல்புரம் உள்ளிட்ட பல கிராமங்களில் இருந்து காய்கறிகள் கொண்டுவரப்படுகிறது. இல்லை என்று சொல்லாத அளவிற்கு அளவிற்கு காய்கறிகள், பனங்கிழங்கு, கரும்பு, மஞ்சள் குலை, வாழை இலை, தேங்காய் உள்ளிட்ட தைப்பொங்கலுக்குரிய பொருட்கள் அனைத்தும் கிடைக்கும் அளவிற்கு விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. பொங்கல் விழாவை ஒட்டி அரசு உத்தரவுப்படி தூத்துக்குடி உழவர்சந்தையில் மின் அலங்காரம் செய்யப்படுகிறது. நாளை காலை சமத்துவ பொங்கல் விழாவும் நடக்கிறது. திருநெல்வேலி வேளாண் விற்பனை குழு உறுப்பினர்களும் இதில் கலந்து கொள்கின்றனர். இவ்வாறு தாமஸ் தெரிவித்தார்.

## விதை கிராம பயிற்சி திட்டம்

திருவெறும்பூர்: திருவெறும்பூர் வேளாண் விரிவாக்க மையம் சார்பில், காட்டூர் வீதி வடங்கம் பகுதியில் விதை கிராம பயிற்சி திட்டம் நடந்தது. நிகழ்ச்சிக்கு மாநில திட்ட துணைவேளாண் இணை இயக்குனர் ராம்குமார் தலைமை வகித்தார். விதைச்சான்று வேளாண் உதவி இயக்குனர் ஜெயராஜ் முன்னிலை வகித்தார். திருவெறும்பூர் வேளாண் உதவி இயக்குனர் ரவி வரவேற்றார். விதை கிராம திட்டத்தின் கீழ் விதையை நடுவது, பராமரிப்பது, அறுவடை செய்வது, அரசிடம் விற்பது குறித்து ஜெயராஜ் பேசினார். தனி நபரின் உணவு தேவைக்கேற்ற படி உற்பத்தி இல்லை. அதைப் பெருக்க புதிய யுக்திகளை கையாள வேண்டும் என்று ரவி பேசினார். விதை கிராமத்தில் களவன் இல்லாத தரமான விதையை பெறுவது பற்றி, விதைச்சான்று அலுவலர் எஸ்தர் பிரேம்குமார் பேசினார். வேளாண் அலுவலர் உஷாராணி பேசுகையில், "உளுந்து பயிருக்கு பூக்கும் தருணத்தில் ஒரு முறையும், 15 நாள் கழித்தும் டி.ஏ.பி., கரைசல் தெளிக்க வேண்டும்' என்றார். விதையை நேர்த்தி செய்வது பற்றி செயல்முறை விளக்கம் அளித்தனர்.வேளாண் உதவி அலுவலர் திருக்குமரன் நன்றி கூறினார். பயிற்சிக்கான ஏற்பாடுகளை ஜனார்த்தனன், அமல்ராஜ், பிரான்சிஸ் இசபெல்லா மேரி ஆகியோர் செய்திருந்தனர்.

## தென்காசி பகுதியில் பொங்கல் விற்பனை ஜோர்

தென்காசி:தென்காசி, செங்கோட்டை பகுதியில் பொங்கல் பொருட்கள் விற்பனை விறுவிறுப்பாக நடந்து வருகிறது.பொங்கல் திருநாளை நாடு முழுவதும் மக்கள் நாளை (14ம் தேதி) கொண்டாடுகின்றனர். இதனை முன்னிட்டு கரும்பு, மஞ்சள், பனங்கிழங்கு, காய்கறி வகைகள், பொங்கல் பானை, வாழைத்தார் விற்பனை விறுவிறுப்பாக நடந்து வருகிறது. தென்காசி பகுதியிலும் பொங்கல் பொருட்கள் விற்பனை அமோகமாக இருந்தது. தென்காசி நகராட்சி மார்க்கெட், கூளக்கடை பஜார் காய்கறி மார்க்கெட், கீழரதவீதி, வடக்கு ரதவீதி மற்றும் முக்கிய இடங்களில் பொங்கல் பொருட்கள் குவித்து வைக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்டன.கரும்பு கட்டு ஒன்றுக்கு (15 எண்ணம்) 150 ரூபாய் முதல் 190 ரூபாய் வரைக்கும், ஒரு கரும்பு 15 ரூபாய் முதல் 25 ரூபாய் வரைக்கும் விற்பனை செய்யப்பட்டது. 25 எண்ணம் கொண்ட பனங்கிழங்கு கட்டு ஒன்றுக்கு 25 ரூபாய் முதல் 30 ரூபாய் வரைக்கும், மஞ்சள் 10 ரூபாய் முதல் 15 ரூபாய் வரைக்கும் விற்பனை செய்யப்பட்டது. பொங்கல் மண் பானை 15 ரூபாய் முதல் 50 ரூபாய் வரை விற்பனையானது.வாழைதார் விற்பனையும் அமோகமாக இருந்தது. கற்பூரவல்லி தார் ஒன்றுக்கு 150 ரூபாய் வரையும், நாடு தார் ஒன்றுக்கு 120 ரூபாய் வரையும், கோழிகூடு தார் ஒன்றுக்கு 160 ரூபாய் வரையும், மோரீஸ், ரோபஸ்டா தார் ஒன்றுக்கு 100 ரூபாய் வரையும் விற்பனை செய்யப்பட்டது.
தென்காசி, செங்கோட்டை பகுதியில் காய்கறி விற்பனையும் விறுவிறுப்பாக நடந்தது. காய்கறிகளின் விலை விபரம் ஒரு கிலோவிற்கு ரூபாய் விபரம் வருமாறு:கேரட்-15, பீன்ஸ்-15, உள்ளி-17, உருளை-15, சவ்சவ்-8, அவரை-15, புடலை-10, சீமபூசணி-10, நாட்டு பூசணி-5, கோஸ்-6, வெண்டை-12, பல்லாரி-15, கத்தரி-28, தக்காளி-22, மிளகாய்-15, காலிபிளவர்-20, சிறுகிழங்கு-20, சேம்பு-20, பால்சேம்பு-20, சீனிஅவரை-8, மாங்காய்-80, சுரைக்காய் -5, ஒரு வாழைக்காய-2, தேங்காய்-5 முதல் 6 ரூபாய் வரை விற்பனை செய்யப்பட்டது. பனை ஓலை கட்டு ஒன்றுக்கு 25 ரூபாய் வரை விற்பனையானது.மேலகரம், குற்றாலம், இலஞ்சி, பிரானுார், வல்லம், செங்கோட்டை, புளியரை, பண்பொழி, அச்சன்புதுார், இடைகால், ஆய்க்குடி, சாம்பவர்வடகரை மற்றும் அதன் சுற்று வட்டார பகுதியிலும் பொங்கல் பொருட்கள் விற்பனை ஜோராக நடந்தது.

### நெல் விதை உற்பத்தி பயிற்சி முகாம்

தென்காசி:அய்யனார்குளத்தில் நெல் விதை உற்பத்தி பயிற்சி முகாம் நடந்தத.ஆலங்குளம் வட்டாரம் அய்யனார்குளத்தில் நெல் விதை கிராம திட்டத்தின் கீழ் தரமான நெல் விதை உற்பத்தி குறித்த விவசாயிகளுக்கான பயிற்சி முகாம் நடந்தது. பஞ்., தலைவர் நயினார் பாண்டி தலைமை வகித்தார். வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் மேரிஅமிர்தாபாய் செம்மை நெல் சாகுபடி குறித்து பேசினார். விதைச்சான்று அலுவலர் சிவகுருநாதன் தரமான நெல்விதை சாகுபடியில் கலவன்களை நீக்குதல் பற்றி கூறினார்.வேளாண்மை அலுவலர் சுனில்தத் மண் மாதிரி எடுப்பது குறித்து செயல் விளக்கம் செய்து காட்டினார். உதவி வேளாண்மை அலுவலர் கனிராஜா நன்றி கூறினார். ஏற்பாடுகளை உதவி வேளாண்மை அலுவலர் செந்தில்குமார் செய்திருந்தார்.

### கால்நடை பாதுகாப்புமுகாம்

பாவூர்சத்திரம்:சடையப்புரத்தில் கால்நடை பாதுகாப்பு முகாம் நடந்தது.தமிழக முதல்வரின் சிறப்பு கால்நடை பாதுகாப்பு முகாமிற்கு குலசேகரப்பட்டி பஞ்., தலைவர் மணிவண்ணன் தலைமை வகித்தார். யூனியன் துணைத்தலைவர் மதிசெல்வன் முன்னிலை வகித்தார். மேலப்பாவூர் கால்நடை ஆய்வாளர் செல்வம் வரவேற்றார். முகாமில் பாவூர்சத்திரம் கால்நடை மருத்துவ டாக்டர்.சந்திரசேகர், உதவியாளர்கள் லட்சுமணன், முத்துநாயகம், ஆய்வாளர் செல்வம் ஆகியோர் கால்நடை முகாமில் பணியாற்றினர். 170 மாடுகள், 50 ஆடுகள், கோழி, நாய் ஆகிய கால்நடைகள் பயன்பெற்றது. சிறந்த கால்நடைவளர்த்தவர்களுக்கு பரிசு வழங்கப்பட்டது.

### புவி வெப்பமயமாதல் விழிப்புணர்வு விழா

திருவண்ணாமலை:பூமி வெப்பமயமாதலை தடுக்கும் வகையில் அதிகளவு மரங்கள் வளர்ப்பதை வலியுறுத்தும் வகையில் தி.மலை அருகே கீழ்அணைகரை கிராமத்தில் தீபம் இளைஞர் நற்பணி மன்றம் சார்பில் மரக்கன்றுகள் நடும் விழா நடந்தது.விழாவிற்கு பஞ். தலைவர் ரவிக்குமார் தலைமை வகித்தார்.
முருகையன் மாதிரி பள்ளி தாளாளர் கார்த்திகேயன், சண்முகா கல்லூரி செயலாளர் சவுந்தர்ராஜன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.லயன்ஸ் கிளப் மாவட்ட தலைவர்கள் ரவி, தினேஷ், தீபம் இளைஞர் மன்ற தலைவர் சிவா, கிராம பஞ்., வார்டு உறுப்பினர்கள் ராம்குமார், தேவராஜன், அப்பு, பிரகாஷ் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

### பயறு விதை உற்பத்தி குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி

அரக்கோணம்:பழையபாளையம் மோட்டூரில் வேளாண்மை துறை சார்பில், பயறு விதை உற்பத்தி செய்வது குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.காவேரிப்பாக்கம் அடுத்த பழையபாளையம் மோட்டூர் கிராமத்தில் தமிழ்நாடு வேளாண்மை துறை சார்பில், விதை கிராம திட்டத்தின் கீழ், பயறு விதை உற்பத்தி செய்வது குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.

இப்பயிற்சியை கவுன்சிலர் மணி தலைமை வகித்து, துவக்கி வைத்தார். உதவி வேளாண்மை அலுவலர் செல்வகுமார் வரவேற்றார்.வேளாண்மை அலுவலர் பாபு, வேளாண்மை தொழில்நுட்பங்கள் குறித்து பேசினார். காவேரிப்பாக்கம் வேளாண்மை உதவி இயக்குனர் ஜெயச்சந்திரன், பயறு சாகுபடியின் முக்கியத்துவம், அரசு வழங்கும் மானியங்கள் மற்றும் உற்பத்தி அதிகரிக்க வேண்டிய தொழில்நுட்பங்கள், வருமானம் அதிகரிக்க தேவையான வழிமுறைகள் குறித்து பேசினார்.

தோட்டக்கலை வேளாண்மை உதவி அலுவலர் பிரபாகர் விதை பெருக்க திட்ட நன்மைகள் பற்றி கூறினார்.இந்நிகழ்ச்சியில், பழையபாளையம் சுற்றியுள்ள கிராமங்களை சேர்ந்த 50 விவசாயிகள் கலந்து கொண்டனர்.வேளாண்மை உதவி அலுவலர் திருக்குமரன் நன்றி கூறினார்.

### கள்ளக்குறிச்சியில் பொங்கல் பண்டிகை விற்பனை படுஜோர்

கள்ளக்குறிச்சி : பொங்கல் பண்டிகையை முன்னிட்டு கள்ளக்குறிச்சி பகுதியில் நடைபாதை கடைகளில் வியாபாரம் படுஜோராக நடந்து வருகிறது.தமிழர்களின் முக்கிய பண்டிகைகளில் முதன்மை பெற்றது பொங்கல் பண்டிகை. குறிப்பாக நாட்டின் முதுகெலும்பான விவசாயிகள், விவசாயத்திற்கு உதவும் கால்நடைகளும் பங்கு கொள்ளும் வகையில் கொண்டாடப்படும் பண்டிகை இதுவாகும். கள்ளக்குறிச்சி அதிக அளவிலான விவசாய கிராமங்களை உள்ளடக்கியது. இதனால் மற்ற பண்டிகைகளைவிட பொங்கல் பண்டிகையை இப்பகுதியில் சிறப்பாக கொண்டாடி வருகின்றனர். குடும்பத்தில் உள்ள அனைவருக்கும் துணி எடுக்க பெரிய கடைகளுக்கு செல்ல முடியாதவர்கள், நடைபாதை கடைகளை நாடி செல்கின்றனர். பொங்கல் பண்டிகையை முன்னிட்டு விழுப்புரம் மாவட்டம் கள்ளக்குறிச்சி நகர முக்கிய சாலைகளில் நடைபாதை கடைகள் அதிகரித்துள்ளது. ஏழைகளின் பட்ஜெட்டுக்கு தகுந்தபடி பல வண்ணங்களில், அழகான துணிகள் விற்கப்படுகிறது.பொதுமக்களை தங்கள் கடைகளுக்கு அழைக்கும் விதத்தில் விற்பனையாளர்கள் அட்டைகளால் வடிவமைத்த கூம்பு வடிவ மைக்குகளை கொண்டு கூவி அழைக்கின்றனர். விவசாயிகளின் நண்பனான கால்நடைகளுக்கு தேவையான கயிறு விற்பனையும் சூடுபிடித்துள்ளது.

### உழவர் சந்தையில் குறைந்த விலையில் பொங்கல் பொருள்கள் விற்பனை

விருதுநகர்: விருதுநகர் மாவட்டத்தில் உழவர் சந்தைகளில் பொதுமக்களுக்கு பொங்கல் பொருள்கள் குறைந்த விலையில் விற்பனை செய்யப்படுகிறது. விருதுநகர் மாவட்டத்தில் விருதுநகர், சாத்தூர், அருப்புக்கோட்டை, சிவகாசி, ஸ்ரீவி., ராஜபாளையம், தளவாய்புரம், காரியாபட்டி ஆகிய 8 இடங்களில் உழவர் சந்தை செயல்பட்டு

வருகிறது. பொங்கல் பண்டிகையை முன்னிட்டு கரும்பு, மஞ்சள் கிழங்கு, வாழை இலை, மற்றும் வாழைப்பழம், காப்பு செடிகள் ஆகிய பொருள்கள் விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.பொங்கல் பண்டிகையை முன்னிட்டு உழவர் சந்தையில் வெளி மார்க்கெட்டில் உள்ள விலையை விட 15 சதம் குறைந்த விலையில் விற்பனை செய்யப்படவுள்ளது. பொதுமக்கள் வாங்கி பயனடையும்படி விவசாய துணை இயக்குனர் கணேசன் தெரிவித்துள்ளார்.

### கால் நடை மருத்துவ முகாம்

சாத்தூர்: வெம்பக்கோட்டை ஒன்றியம் குகன்பாறையில் ஏழாயிரம்பண்ணை கால்நடை ஆஸ்பத்திரி சார்பில் கால்நடை மருத் துவ முகாம் நடந்தது. டாக்டர் அரவிந்தன் தலைமை வகித்தார். ஊராட்சித் தலைவர் ராஜகோபால் முன்னிலை வகித்தார். கால்நடைகளுக்கு சிகிச்சை அளிக்கப் பட்டது. ஏற்பாடுகளை கால்நடை உதவியாளர்கள் கல்யாணி,சோணைமுத்து செய்திருந்தனர்.

### காய்கறி விற்பனை மந்தம்; சர்க்கரை விலை உயர்வு

திருப்பூர் : திருப்பூர் காய்கறி மார்க்கெட்டில், பொங்கல் பண் டிகைக்கு எதிர்பார்த்த விற்பனை இல்லை; அதே நேரத்தில், சர்க்கரை விலை கடுமையாக உயர்ந்துள்ளது. திருப்பூர் மார்க்கெட்டில் தக்காளி கூடை 60 ரூபாய் முதல் 70 ரூபாய் வரை விற்கிறது. சில வாரங்களாக தக்காளி விலை குறைய தொடங்கியுள்ளது. வெளியூர் தக்காளியின் வரவு முற்றிலும் குறைந்து, லோக்கல் தக்காளி வரவு அதிகரித்துள்ளது. வெங்காயத்தின் விலை கடுமையாக உயர்ந்ததால், வெளியூர்களில் இருந்து வரத்து அதிகரித்துள்ளது; கிலோவுக்கு 8 ரூபாய் வரை குறைந்துள்ளது. ஊட்டி உருளை குறைந்து, கோலார் உருளை வருகை அதிகரித்துள் ளது. பொங்கல் பண்டிகைக்கு எதிர்பார்த்த விற்பனை இல்லை.தக்காளி ஒரு கிலோ 15 ரூபாய்; அவரை 20; வெங்காயம் பெரியது, சிறியது 16; உருளை 18; பீன்ஸ் 20; கேரட் 20; முள்ளங்கி 10; பீட்ரூட் 16; பாகை 16; பாலக்காடு சேனை 20; மிளகாய் 20; மேரக்காய் 12; புடலை 10; பீர்க்கங்காய் 20; பூசணி 8; அரசாணி 4; முட்டைகோஸ் 10; காளிபிளவர் 10; கத்தரி 20; இஞ்சி 40 ரூபாய்க்கு விற்பனையாகிறது.

சர்க்கரை விலை அதிகரிப்பு: பொங்கல் பண்டிகையால், சர்க்கரை விலை அதிகரித்துள்ளது; கிலோ 43 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகிறது.

தினசரி மார்க்கெட் சங்க தலைவர் பாலசுப்ர மணியம் கூறியதாவது:பொங்கல் பண்டிகையை முன்னிட்டு, சர்க்கரை, ஏலக்காய் விலை அதிகரித்து வருகிறது. ஒரு கிலோ அஸ்கா ஐந்து ரூபாய் வரை அதிகரித்து 43 ரூபாய்; ஏலக்காய் கிலோவுக்கு 100 ரூபாய் அதிகரித்து 1,300; உருண்டை வெல்லம் இரண்டு ரூபாய் அதிகரித்து 38 ரூபாய்க்கு விற்பனையாகிறது; மேலும் விலை உய ரும் என எதிர்பார்க்கப்படுகின்றன.

பருப்புகளின் விலையில் மாற்றமில்லை. பாசிப் பருப்பு கிலோ 83 ரூபாய்; பாசிபயிறு 69; துவரம் பருப்பு 77 முதல் 85 வரை; கொள்ளு 40; தட்டப் பயிறு 43; கருப்பு உளுந்து 72; வெள்ளை உளுந்து 80; சுண்டல் கடலை 38 ரூபாய்க்கு விற்பனையா கிறது, என்றார்.

பூக்கள் விலை அதிகரிக்கும்: பூக்களின் விலை விபரம் குறித்து பூ மார்க்கெட் சங்க செயலாளர் சக்திவேல் கூறியதாவது: புத்தாண்டு, ஆருத்ரா தரிசனம், மாங்கல்ய பூஜை என பண்டிகைகள் தொடர்ந்து வந்ததால், பூக்களின் விலை அதிகரித்தது. தற்போது மல்லிகை மற்றும் முல்லை சீசன் இல்லை; முல்லை வரத்து முற்றிலும் குறைந்துள்ளது. மல்லிகை ஒரு கிலோ 400 ரூபாய்; ஜாதி முல்லை 250; கனகாம்பரம் 250; செவ்வந்தி 30; சம்பங்கி 30; பட்டுப்பூ 50; அரளி 80; தாமரை ஒன்று 5; ரோஜா 20 எண்ணிக்கை 30; செம்பகப்பூ ஒன்று 1; மாலை பெரி யது

120; சிறியது 30 ரூபாய் என விற்கப்படுகிறது. பனி காலம் என்பதால், பூ விளைச்சல் குறைந்துள் ளது. பொங்கல் மற்றும் தை அமாவாசை வருவதால், பூக்களின் விலை அதிகரிக்கும், என்றார்.

தலைசுற்ற வைக்கும் பழம் விலை: சில மாதங் களாகவே வாழைப்பழங்கள் விலை மக்களின் மனதை பதம் பார்க்கும் விதமாக அதிகரித்து வந்தது. பொங்கல் பண்டிகையால், பழத்தார் ஒன்று 50 ரூபாய் வரை விலை அதிகரிக்கும் வாய்ப்புள்ளது.வாழைப்பழ விற்பனை குறித்து வியாபாரி ரஹமத் துல்லா கூறுகையில், ""பூவன் பழத்தார் 200 முதல் 300 ரூபாய் வரை விற்பனையாகிறது. மொத்த விற்பனை யில் மோரீஸ் 4 ரூபாய் வரையிலும்; செவ்வாழை 5 வரையிலும்; ரஸ்தாளி 3 வரையிலும்; தேன்வாழை இரண்டு வரையிலும் விற்கப்படுகிறது. சில்லரை விற்பனையில் மோரீஸ் ஒரு பழம் 3.50 வரையும்; செவ்வாழை 7; ரஸ்தாளி 4; செவ்வாழை 2.50 ரூபாய் வரை விற்பனையாகிறது. பூவன் பழம் தவிர மற்றவை அனைத்தும் எண்ணிக்கையில் விற்கப்படு கிறது. பழத்தாருக்கு மேலும் 50 ரூபாய் வரை விலை அதிகரிக்கலாம்," என்றார்.

முட்டை விலையில் மாற்றமில்லை: முட்டை வியாபாரி லோகநாதன் கூறுகையில், ""முட்டை விலை இரண்டு காசு அதிகரித்துள்ளது; ஆனால், சில்லரை விற்பனையில் எந்த மாற்றமும் இல்லை. கொள்முதல் விலை 2.53 காசுகளில் இருந்து 2.55 காசுகளாக உயர்ந்துள்ளது. மொத்த விற்பனையில் 2.57; சில் லரை விற்பனையில் 2.75 முதல் மூன்று ரூபாய் வரை விற்கப்படுகிறது. மார்கழி மற்றும் பொங்கல் முடிந் தால் விற்பனை சூடுபிடிக்கும்," என்றார்.நல்லெண்ணெய் விலை அதிகம்: ஆயில் சங்க தலைவர் சந்திரன் கூறுகையில், ""நல்லெண்ணெய் உற்பத்தி குறைந்ததால், விலை அதிகரித்துள்ளது. கடந்த வாரத்தை விட நல்லெண்ணெய் கிலோவுக்கு மூன்று ரூபாய் அதிகரித்துள்ளது. பொங்கல் பண் டிகைக்கு என ஆயில் விலையில் அதிக மாற்றம் இருக்காது. நல்லெண்ணெய் கிலோ 95; விளக் கெண்ணெய் 80; சூரியகாந்தி எண்ணெய் 61; கடலை எண்ணெய் 78; தேங்காய் எண்ணெய் 60; பாமாயில் கிலோ 46; நெய் கிலோ 280 ரூபாய்க்கும் விற்பனையாகிறது," என்றார்.தை பிறந்தால் தங்கம் விற்பனை எகிறும்: வரும் நாட்களில் தங்கத்தின் விற்பனை அதிகரித்து, தொழி லில் நல்ல முன்னேற்றம் ஏற்படும் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

நகை வியாபாரிகள் சங்க துணை தலைவர் பரசுராமன் கூறுகையில், ""தை முதல் ஆவணி வரை தங்கம் விற்பனை அதிகளவில் இருக்கும். முகூர்த்த நாட்கள் அதிகம் வருவதால், விற்பனை அதிகரிக்கும் வாய்ப்பு உள்ளது. வரும் நாட்களில் 30 முதல் 50 சதவீதம் வரை விற்பனை அதிகரிக்கும் என்ற எதிர் பார்ப்பு உள்ளது. டாலர் மதிப்பு குறைந்து, நாடு முழு வதும் தொழில் சிறப்படையும் நிலை உருவாகி யுள்ளது. நகை தொழிலாளர்களின் தொழில் மற்றும் வர்த்தகம் மேம்படும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இன்று (நேற்று) ஒரு கிராம் 1,610 ரூபாய், பவுன் 12,880 ரூபாய் என விற்கப்பட்டது. வெள்ளி ஒரு கிராம் 30.50 ரூபாய்க்கு விற்கப்படுகிறது," என்றார்.

### விலை கிடைக்காததால் வரமிளகாய் விவசாயிகள் கவலை

திருப்பூர் : திருப்பூர் ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்துக்கு, வரமிளகாய் வரத்து துவங்கியுள்ளது; ஆனால், விவசாயிகள் எதிர்பார்த்த விலை கிடைக்கவில்லை. தை மாத இறுதியில் மேலும் வரத்து அதிகரிக்கும் என்பதால், மேலும் விலை குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது.ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில், வாரம்தோறும் செவ்வாய்க்கிழமை காலை 6.00 மணிக்கு நடக்கும் ஏலத்துக்காக, பல்வேறு பகுதிகளில் இருந்து, சோளம், ராகி, வரமிளகாய், கம்பு உள்ளிட்ட பொருட்கள் கொண்டு வரப்படுகின்றன.

போதிய விலை கிடைக்கவில்லை எனில், அங்குள்ள குடோன்களில் இருப்பு வைக்கப்படுகிறது. விலை உயர்வடையும் நேரத்தில், இருப்பு வைத்துள்ள பொருட்கள் விற்கப்படும்.கடந்த இரு மாதங்களாகவே, வரமிளகாய் விலை குறைவாகவே இருந்தது. கிலோ 65 ரூபாய் வரை விற்கப்பட்டது. இதனால், 500 குவிண்டாலுக்கும் அதிகமான வரமிளகாய் இருப்பு வைக்கப்பட்டது. நேற்று நடந்த ஏலத்தில், சம்பா ரக மிளகாய்க்கு கிலோ 65 ரூபாய்; குண்டு மிளகாய் 100 ரூபாய் என, விலை நிர்ணயம் செய்யப்பட்டிருந்தது. எதிர்பார்த்தபடி, விலை கிடைக்கவில்லை;

மேலும், தை மாதத்தில் இருந்து செஞ்சேரிமலை, வடசித்தூர், காட்டம்பட்டி, காமநாயக்கன்பாளையம் சுற்றுப்பகுதிகளில் இருந்து வரமிளகாய் வரத்து துவங்கும். இதனால், மேலும், விலை குறைய வாய்ப்புள்ளது. இருப்பு வைத்துள்ள மிளகாய்க்கு மேலும் விலை கிடைக்காது என்பதால், தற்போதுள்ள விலைக்கே மிளகாயை விற்பனை செய்ய விவசாயிகள் முடிவு செய்தனர்.

கண்காணிப்பாளர் ஆறுமுகராஜன் கூறுகையில்,""பருத்தி வரத்து படிப்படியாக குறைந்து விட்டது. தை இறுதியில் சீசன் உள்ளதால், அப்போது பருத்தி வரத்தும் துவங்கும். தற்போது பருத்திக்கு அதிக தேவை உள்ளது. சாதாரணமாக, 23 ஆயிரம் ரூபாய் வரை விற்பனையாகும் ஒரு காண்டி பருத்தி பஞ்சு, தற்போது 27 ஆயிரம் ரூபாய் வரை உயர்ந்துள்ளது. பல்வேறு காரணங்களால், திருப்பூருக்கு பருத்தி வரத்து நாளுக்கு நாள் குறைந்து வருகிறது. வியாபாரிகள் அதிகம் வந்துசெல்லும் விற்பனைக்கூடங்களுக்கு சென்று விடுகிறது. வரமிளகாய் வரத்து அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுவதால், விலை மேலும் குறையும். விவசாயிகளும், வியாபாரிகளும் எதிர்பார்த்த அளவுக்கு இம்முறை விலை அமையவில்லை," என்றார்.

### மாசிப்பட்ட பருத்தி சாகுபடி ஜனவரி 12,2010,12:36 IST

கோடைப்பருவத்தில் பருத்தி சாகுபடி செய்ய இருக்கும் விவசாயிகள் அதிக மகசூல் பெற கீழ்காணும் தொழில்நுட்பங்களை கடைபிடிக்கவும்.

சம வயதுள்ள ரகத்தை தேர்ந்தெடுத்து ஏக காலத்தில் (ஒரு வாரத்திற்குள்) விதைத்திடவேண்டும். இயன்றவரை பூச்சி நோய் தாங்கி வளரவல்ல எஸ்விபிஆர் 2 ரகத்தை தேர்ந்தெடுத்து பயிரிட வேண்டும். சாணிப்பால் கொண்டு விதைநேர்த்தி செய்து நிழலில் உலர்த்த வேண்டும். பின்னர் விதைப்பதற்கு சற்று முன்பாக ஒரு கிலோ விதைக்கு பத்து கிராம் சூடோமோனாஸ் புளூரசன்ஸ் பயன்படுத்தி விதைநேர்த்தி செய்யவும். காற்றடிக்கும் திசைக்கு குறுக்காக பார்கள்/ வரிசைகள் அமைத்து விதைத்தால் மருந்தடிக்கும்போது மருந்துக் கலவை வீணாகாமல் தடுக்க உதவும். வயலைச் சுற்றிலும் உள்ள செடிகள், களைகளை (பூச்சி களுக்கு மாற்றுணவாகப் பயன் படும்) அகற்றி சுத்தமாக வைக்க வேண்டும். தொழு உரம் மற்றும் வேப்பம் பிண்ணாக்கு இடுவது பூச்சி மற்றும் நோய்தாக்குதலைக் குறைக்கும். (வேரழுகல், வாடல், நூற்புழு, தண்டுக்கூண் வண்டு, தரைக்கூன்வண்டு, வேர்ப்புழு).
விதைத்த 30வது நாளில் சூடோமோனாஸ் புளூரசன்ஸ் (ஏக்கருக்கு ஒரு கிலோ) இடுவது வேரழுகல், வாடல் நோய்த் தாக்குதலைக் குறைக்கும். நட்ட 20 மற்றும் 30ம் நாள் வேப்பெண்ணெய் 1 சதம் கரைசல் தூரில் ஊற்றுதல் தண்டுக் கூன் வண்டுத் தாக்குதலைக் குறைக்கும். ஊடுபயிராக வாய்க்கால்கள் மற்றும் பாத்தி வரப்புகளில் ஓரங்களில் தட்டைப்பயறு வளர்த்தால் பொரி வண்டுகள் பெருக்கத்திற்கு துணைபுரியும். மேலும் பூச்சியின் வருகையை கண்காணிக்க ஊடுபயிராக மக்காச்சோளம், உளுந்து மற்றும் சீனி அவரை (கொத்தவரை) , ஓரப்பயிராக ஆமணக்கு, சூரியகாந்தி பயிரிட வேண்டும். இரட்டை வரிசையில் பருத்தியை பயிரிட்டு இடைவெளியில் ஒரு வரிசை உளுந்து அல்லது சீனி அவரை (கொத்தவரை) ஊடுபயிராக பயிரிடலாம். உளுந்து ஊடு பயிராக பயிரிட்டால் தத்துப்பூச்சி தாக்குதல் குறையும். சீனி அவரை ஊடுபயிராக பயிரிட்டால் தத்துப்பூச்சி மற்றும் காய்ப்புழு தாக்குதல் குறையும். மேலும் இந்த பயறுவகை பயிர்கள் மூலம் வேர் முடிச்சுகளில் தழைச்சத்து உற்பத்தி செய்யப்பட்டு மண்ணின்வளம் மேம்படுகிறது.

ஆமணக்கு புரடீனியா புழு தத்துப்பூச்சிகள் முட்டையிட கவர்ந்திழுக்கும். வெண்டை, ஆமணக்கு மற்றும் சூரியகாந்தி பயிர்கள் முறையே புள்ளிக்காய்ப்புழு, புரடீனியா மற்றும் அமெரிக்கன் காய்ப்புழு தாக்குதலை கவர்ந்திழுக்கும். அந்துப்பூச்சிகளை அங்கேயே கட்டுப்படுத்திவிட வேண்டும். ஊடுபயிராக வாய்க்கால்களில் மக்காச்சோளம் பயிரிட கிரைசோபா, குளவிகள் போன்ற நன்மை தரும் பூச்சிகளின் பெருக்கத்திற்கு துணைசெய்யும். வயலைச் சுற்றி ஆமணக்கு பயிரிட்டு புரடீனியாப் புழு முட்டைகளைச் சேகரித்து அழிக்கலாம். வெண்டை பயிரிட்டு சொத்தைக் காய்களைப் பறித்து அகற்ற வேண்டும். வயலைச் சுற்றி அரண் போன்று சோளம் நெருக்கமாக (உயரமாக வளரும்

ரகம்) வளர்க்க வேண்டும். (தத்துப்பூச்சி, இலைப்பேன்கள், வெள்ளை ஈ, மாவுப்பூச்சி மற்றும் காய்ப்புழுவின் அந்துகள் வயலினுள் நுழைவதைத் தடுக்க).

மேலும் உழவர்கள் தங்கள் பயிர் பாதுகாப்பு பிரச்னைகளுக்கு தக்க ஆலோசனை பெற, பாதித்த பயிர் மாதிரி மற்றும் பூச்சியுடன் அருகிலுள்ள வேளாண்மை அலுவலர் மற்றும் ஸ்ரீவில்லிபுத்தூர் பருத்தி ஆராய்ச்சி நிலையத்தில் உள்ள பயிர் மருத்துவ நிலையத்தினை நேரில் அணுகவேண்டும்.

**அ. ராமலிங்கம்,**
பேராசிரியர் மற்றும் தலைவர் பருத்தி ஆராய்ச்சி நிலையம், ஸ்ரீவில்லிபுத்தூர்-626 125.

### பரம்பிக்குளம் ஆழியாறு பாசன விவசாயிகள் கவனத்திற்கு... ஜனவரி 12,2010,12:35 IST

உங்களுடைய தென்னை மரத்திற்கு சொட்டுநீர் பாசனம் அமைத்து ஐந்து ஆண்டுகளுக்கு மேல் ஆகிறதா! உடனே 65 சதவீத மானியத்தில் நீர்வள- நிலவள திட்டத்தின்கீழ் பழைய பாசன முறைகளை மாற்றி அடுத்த பத்தாண்டுகளுக்கு நிலையான, நிரந்தரமான, நிம்மதியான பாசனத்திற்கு வழிவகுப்போம்.
சுமார் ஐந்து ஆண்டுகளுக்கு மேற்பட்டுள்ள அனைத்து தென்னை சாகுபடி செய்துள்ள விவசாயிகளுக்கு ஒரு ஏக்கருக்கு ரூ.8385 மானிய உதவியுடனும் அதிகபட்சம் 12.5 ஏக்கருக்கு 56,030 மானிய உதவியுடன் ஜெயின் இரிகேஷன் சிஸ்டம்ஸ் உடன் பாசன பகுதியில் உள்ள பாலாறு மற்றும் ஆழியாறு வடிநிலப் பகுதியிலுள்ள அனைத்து விவசாயிகளின் கோரிக்கைகளை ஏற்று 5 ஆண்டுகளுக்கு மேற்பட்டுள்ள அனைத்து சொட்டுநீர் பாசன கருவிகளையும் குறைந்த செலவில் மாற்றிக்கொள்ள அரசு ஆணை கிடைத்துள்ளது. எனவே ஐந்து ஆண்டுகளுக்கு மேற்பட்டுள்ள அல்லது அடுத்த நிறுவனத்தின் மூலம் சொட்டுநீர் பாசனம் அமைத்துள்ள விவசாயிகளும் சொட்டுநீர் பாசன அமைப்பை சரிவர பயன்படுத்தாத விவசாயிகளும் மீண்டும் தங்கள் தேவைக்கேற்ப புதிதாக அதே தோட்டத்திற்கு ஐஏஎம்டபிள்யூஏஆர்எம் திட்டத்தில் மானியம் பெற்றுக் கொள்ளலாம். மானிய வசதியுடன் சொட்டுநீர் பாசனம் அமைத்துக்கொள்ளலாம் என்பது ஒரு சிறப்பம்சம் ஆகும். எனவே பாசன பகுதியிலுள்ள விவசாயிகள் 5 ஆண்டுகளுக்கு முன் அமைக்கப்பட்டுள்ள சொட்டுநீர், தெளிப்புநீர் பாசன கருவிகளை புதுப்பிக்க ஒரு சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. இதன் மூலம் அடுத்த பத்தாண்டுகளுக்கு ஒரு புதிய பாசன அமைப்பை ஏற்படுத்துவதன் மூலம் பராமரிப்பு மற்றும் அதன் மூலம் ஏற்படும் பிரச்னைகளுக்கு தீர்வு காணமுடியும். இதுவரை இந்த மாதிரியான அரசு அறிவிப்பு வரவில்லை. எனவே கிடைக்கின்ற சந்தர்ப்பத்தை பயன்படுத்தி விவசாயிகள் பங்குபெற்று பயனடையுமாறு கேட்டுக்கொள்கிறோம். விரிவான விவரங்களுக்கும் விண்ணப்பங்களுக்கும் அந்தந்த பகுதி பாசன தலைவரை அணுகுங்கள் அல்லது இத்திட்டத்தை செயல்படுத்தும் வேளாண்மை பொறியியல் துறை உதவி செயற்பொறியாளர் அலுவலகம், கோவை-0422-243 3711, பொள்ளாச்சி: 04259-231 271, திருப்பூர்: 0421-221 1580, தாராபுரம்: 99764 26247. விரிவான ஆலோசனை மற்றும் சந்தேகங்களுக்கு தலைவர், விசாகம் பவுண்டேஷன், 97870 50505 இதனுடன் தொடர்புகொண்டு பயன்பெறுமாறு கேட்டுக்கொள்கிறோம்.
-விசாகம் பவுண்டேஷன், 36, சரவணா வீதி, கல்பனா தியேட்டர் பின்புறம், உடுமலை-642 126.

சின்னச்சின்ன செய்திகள் ஜனவரி 12,2010,12:34 IST



குலையிலிருந்து பாக்கு பிரித்தெடுக்கும் இயந்திரம்: தமிழ்நாடு விவசாய பல்கலைக்கழகம் சமீபத்தில் வெளியிட்டுள்ளது.

சிறப்பியல்புகள்: பச்சை மற்றும் முற்றிய பாக்கு காய்களை குலையிலிருந்து சேதாரமின்றி பிரித்தெடுக்க ஏற்றது. கருவியை சிரமமின்றி எளிதாக பாதுகாக்கவும் இயக்கவும் முடியும். சேதாரமின்றி காய்களைப் பிரித்தெடுக்கலாம். ஆட்கள் மூலம் பாக்கு பிரித்தெடுக்கும் முறையுடன் ஒப்பிடும்போது செலவு (86 சதம்) மற்றும் நேரம் (77 சதம்) மீதமாகிறது. செயல்திறன் - மணிக்கு சுமார் 650 முதல் 950 கிலோ வரை பாக்குகளை பிரித்தெடுக்க முடிகிறது. பிரித்தெடுக்கும் திறன் - 99.5 சதம், பிரித்தெடுக்கும் செலவு ஒரு மணி நேரத்திற்கு ரூ.0.16/- கருவியின் விலை ரூ.15,000/-. மேலும் விபரங்களுக்கு: இயக்குனர், விரிவாக்க கல்வி இயக்ககம், த.வே. பல்கலைக்கழகம்,

தமிழ்நாடு விவசாய பல்கலைக்கழகம் வழங்கும் தொலைதூரக்கல்வி முதுநிலை பட்டப்படிப்பு: எம்.பி.ஏ/ (வணிக மேலாண்மை), எம்.எஸ்சி(சுற்றுச்சூழல் மேலாண்மை) மற்றும் எம்.எஸ்சி (கரும்பு உற்பத்தி). பருவமுறை 4 செமஸ்டர். கல்வித்தகுதி - இளமறிவியல் பட்டம் முதுநிலை பட்டப்படிப்பு: உணவு நுட்பவியல், உயிரியல் தகவல்நுட்பவியல் மற்றும் மூலிகைப் பயிர்கள் உற்பத்தி மற்றும் தரக்கட்டுப்பாடு. பருவமுறை - 2 செமஸ்டர். கல்வித்தகுதி: இளமறிவியல் / இளநிலைப்பட்டம்.

சான்றிதழ் பாடங்கள்: பயிற்சி காலம் - 6 மாதம். வயது வரம்பில்லை. காளான் வளர்ப்பு, மண்புழு உரம் தயாரித்தல், அலங்கார தோட்டம் அமைத்தல், மூலிகைப் பயிர்கள், பழங்கள் மற்றும் காய்கறிகளைப் பதப்படுத்துதல் போன்ற வேளாண்மை சார்ந்த 21 பாடங்கள் தமிழிலும் 9 பாடங்கள் ஆங்கிலத்திலும் நடத்தப்படுகின்றன. தகவல் அறிய: இயக்குனர், திறந்தவெளி மற்றும் தொலைதூரக்கல்வி இயக்ககம், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்-641 003. 94421 11047, 9442111048.

நவீன தொழில்நுட்பம் ஜனவரி 12,2010,12:32 IST



தொடர் கரும்பு - கரும்பு பயிர் சாகுபடியில் ஊட்டச்சத்துமேலாண்மை: கரும்பு பயிரானது நடவு மற்றும் மறுதாம்பு பயிராக சாகுபடி செய்யப்படுகிறது. தீவிர கரும்பு சாகுபடியால் மண்ணிலிருந்து அதிக அளவில் பேரூட்டங்கள் மற்றும் நுண்ணூட்டங்களை பயிர் எடுத்துக்கொள்கிறது. கரும்பு விவசாயிகள் இதனை ஈடு செய்ய தேவையான அளவு ஊட்டச்சத்துக்களை அளிப்பதில்லை. எனவே பலதரப்பட்ட ஊட்டச்சத்து குறைபாடுகள் தென்படுகின்றது. தீவிர தொடர் கரும்பு - கரும்பு சாகுபடி செய்யப்படும் மண்ணில் ஏற்படும் பிரச்னைகளை முன்கூட்டியே கண்டறிந்தால் தக்க நிவர்த்தி முறையை கையாள முடியும்.

கோபிசெட்டிபாளையம் பகுதியிலுள்ள வெள்ளாளபாளயம் கிராமத்தில் 20 தொடர் கரும்பு சாகுபடி நிலங்களில் ஊட்டச்சத்து பிரச்னைகள் ஆய்வு செய்யப்பட்டது. சாகுபடி காலத்தில் விவசாயிகள் கையாண்ட உர அளவுகள் பரிந்துரைக்கப்பட்ட உர அளவிலிருந்து தழைச்சத்து உரம் 15 சதம் குறைவாகவும் (157 - 218 கி.கி / எக்டர்), மணிச்சத்து உரம் 50 சதம் அதிக அளவிலும் (88-123 கி.கி/ எக்டர்), சாம்பல்சத்து உரம் 35 சதம் அதிக அளவிலும் (147-163 கி.கி/ எக்டர்) பயன்படுத்தப்பட்டன.

நுண்ணூட்டங்களைப் பொறுத்தவரை பரிந்துரைக்கப்பட்ட அளவிலிருந்து இரும்பு சல்பேட் 90 சதம் குறைவாகவும் (10 கி.கி/ எக்டர்), துத்தநாக சல்பேட் 70 சதம் குறைவாகவும் (15 கி.கி/ எக்டர்) இடப்பட்டன. மேலும் அனைத்து விவசாயிகளும் தொழு உரத்தை பரிந்துரைக்கப்பட்ட அளவிலிருந்து 20 சதம் குறைவான அளவிலும் (8-10 டன்கள்/ எக்டர்) பயன்படுத்தியுள்ளார்கள்.

ஆய்வுகளின் முடிவின்படி கரும்பு மகசூல் நடவுப்பயிரில் எக்டருக்கு 175லிருந்து 195 டன்களாகவும், முதல் மறுதாம்பு பயிரில் 155லிருந்து 170 டன்களாகவும், 2ம் மறுதாம்பு பயிரில் 130-145 டன்களாகவும் இருந்தது. 2வது மறுதாம்பு பயிரில் அறுவடைக்குப் பின் மேற்கொள்ளப்பட்ட மண் ஆய்வின்படி மண்ணின் தழை மற்றும் மணிச்சத்துக்களின் அளவு குறைவாகவும், சாம்பல் சத்து அதிக அளவிலும் இருப்பதாக கண்டறியப்பட்டது. நுண்ணூட்டங்களான இரும்பு மற்றும் தாமிரம் குறைவாகவும் போரான் சத்து சற்று கூடுதாகவும் இருப்பது தெரியவந்துள்ளது.

மண்ணில் ஊட்டச்சத்துக்களின் எஞ்சிய நிலைப்பாடு ஒவ்வொரு அறுவடைக்குப் பின்பும் மண்ணில் இடப்பட்ட உரங்களின் அளவு மற்றும் பயிர் எடுத்துக்கொண்ட ஊட்டச்சத்துக்களின் அளவை கருத்தில் கொண்டு கணக்கிடப்பட்டது. ஒவ்வொரு ஊட்டச்சத்துக்களின் குறியீட்டு அளவும் கணக்கிடப்பட்டது. அதன்படி ஊட்டச்சத்துக்களின் குறியீட்டு அளவை ஆரம்பகால நிலையுடன் ஒப்பீடு செய்ததில் எல்லா சாகுபடி காலங்களிலும் பேரூட்டங்களான தழைச்சத்து மிகக்குறைந்த அளவிலும் மணிச்சத்து குறைந்த அளவைவிட சற்று அதிகமாகவும்,

சாம்பல்சத்து போதிய அளவிலிருந்து மிக அதிக அளவிலும் இருப்பது காணப்பட்டது. எனவே தீவிர கரும்பு சாகுபடி செய்யும் விவசாயிகள் தங்கள் மண்ணில் தோன்றும் நுண்ணூட்டச் சத்துக்களின் பற்றாக்குறையை நிவர்த்திக்க எக்டருக்கு பரிந்துரை செய்யப்படும் ரசாயன உரங்கள், அதாவது 275, 62.5, 112.5 கிலோ தழை, மணி, சாம்பல் சத்துக்களுடன் 100 கிலோ இரும்பு சல்பேட் 37.5 கிலோ துத்தநாக சல்பேட் 5 கிலோ தாமிர சல்பேட் மற்றும் 12.5 டன் தொழு உரம் ஒருங்கிணைந்த முறையில் ஒவ்வொரு பயிருக்கும் இடுவது அவசியமாகிறது.
(தகவல்:த.முத்துமாணிக்கம், ப.ஸ்டாலின், தி.சித்தேஸ்வரி, வெ.வேலு, மண்ணியல் மற்றும் வேளாண் வேதியியல் துறை, த.வே.பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்-641 003).
- டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்.

தினகரன்

## அல்போன்சா விலை ரூ.333

பதிவு செய்த நாள் 1/13/2010 12:12:04 AM



மும்பை : மாம்பழ வகைகளிலேயே மிகவும் ருசியானது அல்போன்சாதான். ஒரே ஒரு அல்போன்சா மாம்பழம் ரூ.333 வரை விலை போகிறது. ஆனால் இந்த விலை இங்கல்ல. ஆஸ்திரேலியாவில்.

மும்பையை அடுத்த ரத்னகிரி விவசாயி ஆனந்த் ஜெயந்த் தேசாய், அமெரிக்கா, ஆஸ்திரேலியா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளுக்கு அல்போன்சா வகை மாம்பழங்களை ஏற்றுமதி செய்து வருகிறார். இவர், 48 அல்போன்சா மாம்பழங்கள் அடங்கிய ஒரு பெட்டியை புனேயை சேர்ந்த ஒரு வர்த்தகருக்கு ரூ.16 ஆயிரத்துக்கு விற்பனை செய்துள்ளார். அது விரைவில் ஆஸ்திரேலியாவுக்கு ஏற்றுமதி செய்யப்பட உள்ளது.

ஜனவரியில் மாம்பழம் ஏற்றுமதி செய்பவர்களுக்கு எப்போதுமே நல்ல விலை கிடைப்பது வழக்கம். ஆனாலும், 48 பழங்கள் அடங்கிய பெட்டி இதுவரை அதிகபட்சமாக ரூ.6,000 முதல் ரூ.7,000 வரை விற்பனை செய்யப்பட்டுள்ளது. ஆனால் இந்த ஆண்டு முந்தைய சாதனைகளைத் தாண்டி அதிக விலைக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது என ரத்னகிரியை சேர்ந்த ஒரு மாம்பழ வியாபாரி தெரிவித்தார்.
பொதுவாக ஏப்ரல், மே மாதங்களில்தான் மாம்பழ சீசன் தொடங்கும். அப்போதுதான் அனைவரும் வாங்கக் கூடிய விலையில் கிடைக்கும். ஜனவரியில் ஏப்போதுமே விலை அதிகமாகதான் இருக்கும் என மாம்பழ வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள முன்னாள் இசையமைப்பாளர் அஷோக் ஹண்டே தெரிவித்துள்ளார்

## தை பொங்கல் கொண்டாட்டம் ஒரு கட்டு கரும்பு ரூ.250

பதிவு செய்த நாள் 1/13/2010 5:45:55 AM

புதுச்சேரி : தைபொங்கல் நெருங்கி விட்டதால் கடைவீதிகளில் பொங்கல் பொருட்கள் விற்பனை சூடுபிடிக்க துவங்கியுள்ளது. ஒருகட்டு கரும்பு இந்தாண்டு ரூ.250க்கு விற்பனை செய்யப்படுகிறது.
உழவர்களின் பண்டிகையான தைப்பொங்கல் நாளை கொண்டாடப்படுகிறது. இதையொட்டி கடலூர் உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களிலிருந்து கரும்புகள் அறுவடை செய்யப்பட்டு சென்னை, புதுவை பகுதிகளுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன.

பொங்கல் பண்டிகையால் புதுவை கடைவீதிகள் களைகட்ட துவங்கியுள்ளது. நேருவீதி பெரிய மார்க்கெட் பகுதிகளில் வழக்கம்போல் கரும்புகள் குவிக்கப்பட்டு விற்பனை ஜரூராக நடக்கிறது. இது தவிர பொங்கலுக்கு தேவையான மஞ்சள், அரிசி, வெல்லம், கிழங்கு, பழங்கள் விற்பனையும் சூடுபிடித்துள்ளது. காந்திநகர், கொசக்கடை வீதி உள்ளிட்ட பல்வேறு இடங்களில் உள்ள பானைக் கடைகளிலும் பொங்கல் பானைகள் வாங்க கூட்டம் அலைமோதுகிறது. கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு விலை அதிகரித்துள்ளது. 300 கட்டுகள் அடங்கிய ஒரு லோடு கரும்பு கடந்த ஆண்டு ரூ.45 ஆயிரத்துக்கு கிடைத்தது. இந்த ஆண்டு ரூ.55 ஆயிரம் வரை விலைபோகிறது. கடந்த ஆண்டு ரூ.150 முதல் ரூ.200 வரை விற்கப்பட்ட ஒருகட்டு கரும்பு இந்த ஆண்டு ரூ.250க்கு விற்பனை செய்யப்படுகிறது. தனி கரும்பு ரூ.9க்கு கொடுக்கப்படுகிறது. இந்த விலையிலும் மாற்றம் இருக்கும் என்று வியாபாரிகள் தெரிவித்தனர்.

இதுதொடர்பாக பெரியமார்க்கெட்டில் கரும்பு வியாபாரி சரவணன் என்பவரிடம் கேட்டபோது, சிதம்பரம் பகுதியில் இருந்து கரும்பு லோடு இறக்கியுள்ளேன். இன்று ஒருகட்டு கரும்பு ரூ.200க்கு விற்கப்படுகிறது. நாளை ரூ.50 வரை அதிகரிக்க வாய்ப்புள்ளது. பொங் கல் நெருங்கி விட்டதால் வியாபாரம் சூடுபிடிக்க துவங்கியுள்ளது என்றார்.
பொங்கல் நெருங்கி விட்டதால் மார்க்கெட் பகுதிகளில் பொருட்கள் வாங்குவதற்கு மக்கள் கூட்டம் அலைமோதுகிறது. இந்த நிலையில் இன்று போகியையொட்டி வீதிகளில் சுகாதார சீர்கேடுகளை ஏற்படுத்தும் வகையில் டயர் போன்ற பொருட்களை எரிக்கக் கூடாது என்று மாசு கட்டுப்பாட்டு வாரியம் எச்சரித்துள்ளது.

## நாளை பொங்கல் ஒரு ஜோடி கரும்பு ரூ.40

பதிவு செய்த நாள் 1/13/2010 6:38:31 AM

ஈரோடு: ஈரோடு மாவட்டத்தில் ஒரு ஜோடி கரும்பு ரூ.20ல் இருந்து ரூ.40 வரை விற்கப்படுகிறது.
நாளை பொங்கல். பொங்கலையொட்டி, ஈரோடு மாவட்டத்தில் கரும்பு விற்பனை அமோகமாக நடைபெறுவது வழக்கம்.

மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் அருகாமையில் உள்ள நாமக்கல் மாவட்டத்திலிருந்தும் விவசாயிகளிடமிருந்து மொத்தமாக கரும்புகள் வாங்கப்பட்டு லாரிகள், வேன்கள் மூலம் கொண்டுவரப்பட்டு விற்பனை செய்யப்படும். பொங்கல் தொடங்கும் முன்பு, 4 நாட்களுக்கு முன்பு தொடங்கப்படும் கரும்பு விற்பனை பொங்கல் முடிந்தும் விற்பனை செய்யப்படும்.

இந்த ஆண்டு கரும்பு வரத்து குறைவாக உள்ளதால் விலை கடுமையாக உயர்ந்துள்ளது. கடந்த ஆண்டு ஜோடி கரும்பு பொங்கல் பண்டிகை துவக்கத்தில் ரூ.15 முதல் ரூ.30 வரை விற்பனை செய்யப்பட்டு வந்த நிலையில் இந்த ஆண்டு துவக்க விலை ரூ.20ல் இருந்து தொடங்கி ரூ.40 வரை விற்பனை செய்யப்பட்டு வருகிறது. கரும்பு வியாபாரிகள் கூறும் போது, விவசாயிகளிடமிருந்து கரும்பு மொத்த வியாபாரிகள் விலைக்கு வாங்கி பின்னர் சில்லரை வியாபாரிகளுக்கு விற்பனை செய்து வருகின்றனர். வாகன வாடகை மற்றும் லாபங்களை கணக்கிட்டு

சில்லரை வியாபாரிகளுக்கு விற்பனை செய்வதால் கடந்த ஆண்டை விட ஜோடி கரும்புக்கு ரூ.10 உயர்ந்துள்ளது. மேலும் கரும்பு  வரத்தும் குறைந்துள்ளதாலும் விலை உயர்ந்துள்ளது என்றனர்.

### புவி வெப்பமயமாவதால் கடலில் மீன்கள் 15மீ ஆழத்தில் சென்றுவிடும்

பதிவு செய்த நாள் 1/13/2010 12:32:20 AM

திண்டுக்கல் : புவி வெப்பமயமாவதால் கடலின் மேற்பரப்பில் உள்ள மீன்கள் 15 மீட்டர்ர ஆழத்திற்குச் சென்று விடும். இதனால் மீன்பிடித் தொழிலுக்கு பெரும் பாதிப்பு ஏற்படும். பவளப்பாறைகளும் அழிந்து விடும் என்று கடலோர இறால் மேம்பாட்டு ஆணைய தலைவர் நீதிபதி ஏ.கே. ராஜன் பேசினார். காலநிலை மாற்றம் குறித்த தென் தமிழக சுற்றுச்சூழல் மாநாடு திண்டுக்கல்லில் நடைபெற்றது.

அமைதி அறக்கட்டளை திட்ட இயக்குனர் பிரிட்டோ வரவேற்றார். தலைவர் பால்பாஸ்கர் தலைமை வகித்துப் பேசுகையில், Ô10 ஆண்டுகளுக்கு ஒருமுறை உலக சுற்றுச்சூழல் மாநாடு நடைபெற்று வருகிறது. இம்முறை நடைபெற்ற மாநாட்டில் எதிர்பார்த்த பலன் இல்லை. வளர்ந்த நாடுகள், வளரும் நாடுகளுக்கு இதுகுறித்து போதனை செய்து வருகிறது. பருவநிலையில் ஏற்பட்டுள்ள மாற்றம் எதிர்கால பாதிப்பிற்கான ஒரு எச்சரிக்கை அறிவிப்பு. உள்ளூர் அளவில் இதுகுறித்த விழிப்புணர்வு நடவடிக்கைகளில் இறங்க வேண்டும்Õ என்றார். காலநிலை மாற்றம் கையேடு மற்றும் குறுந்தகட்டை வெளியிட்டு கடலோர இறால் மேம்பாட்டு ஆணைய தலைவர் மற்றும் சென்னை உயர்நீதி மன்ற முன்னாள் நீதிபதி ராஜன் பேசியதாவது: திண்டுக்கல்லில் தோல்பதனிடும் ஆலைகளால் சுற்றுச்சூழல் வெகுவாய் மாசுபட்டுள்ளது. புவி வெப்பமயமாதல் குறித்து வல்லுனர்கள் கூறுவதை எளிதில் ஒதுக்கித் தள்ளமுடியாது. அமெரிக்க, ஐக்கிய நாடுகளில் 80 ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு பனிப்பொழிவு உள்ளது. வட மாநிலங்களில் அதிக குளிர் உள்ளது. இதற்கு புவிவெப்பமயமாதலே காரணம். ஒன்று, இரண்டு டிகிரி வெப்பநிலை உயர்ந்தாலே மீன்பிடித் தொழிலில் பெரும் மாற்றம் ஏற்படும். நீரின் மேற்பரப்பில் உள்ள மீன்கள் 15 மீட்டர் ஆழத்திற்குச் சென்றுவிடும். புவி வெப்பம் அதிகரித்தால் கடல் எல்லை அதிகரிக்கும். பவளப்பாறைகள் அழிந்து விடும். கடல்நீர் அதிகரிப்பினால் உப்புநீர் குடியிருப்பு பகுதிகளுக்குள் வந்துவிடும். கடலோரப்பகுதிகளில் உள்ள பல கிராமங்கள் மூழ்கி விடும். கார்பன்டை ஆக்சைடு அதிகரிப்பே உலக வெப்பமயமாதலுக்கு காரணம். இவற்றை மரங்கள் உறிஞ்சும் தன்மை உடையது. ஆகவேதான் மரங்களை அதிகம் வளர்க்கவேண்டும் என்று கூறுகிறோம். இவ்வாறு பேசினார்.

நிகழ்ச்சியில் தேசிய சுற்றுச்சூழலில் சிறப்பாக பணியாற்றிய மதுரை எப்ஆர்எஸ்டி ஆராய்ச்சி நிறுவனம், செயின்ட்பால் சுற்றுச்சூழல் சொசைட்டி, நிர்டா நிறுவனம் ஆகியவற்றிற்கு நினைவுப்பரிசுகள் வழங்கப்பட்டன. சுற்றுச்சூழலை வலியுறுத்தி பல்வேறு வகையிலும் விழிப்புணர்வு ஏற்படுத்தி விழிப்புணர்வு போராளிகள் 7 பேரின் உருவப்படங்கள் திறந்து வைத்து அஞ்சலி செலுத்தப்பட்டது.

காந்திகிராம கிராமிய பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் கருணாகரன், இயற்கை விஞ்ஞானி நம்மாழ்வார், குடிமக்கள் உலக அரங்கு அமைப்பாளர் டேவிட், தமிழ்நாடு பசுமை இயக்கத் தலைவர் ஜீவானந்தம் உட்பட பலர் கலந்து கொண்டனர். சுற்றுச்சூழலை மேம்படுத்துவதற்கான வழிமுறைகள், ஒருங்கிணைந்த நீர்வடிப்பகுதிகளின் மூலம் ஏற்படும் சமூக, பொருளாதார மேம்பாடு குறித்த கண்காட்சி இடம் பெற்றிருந்தது.

### ஆராய்ச்சி மையத்தில் பருவகால அட்டவணை தயாரிப்பு பயிற்சி

பதிவு செய்த நாள் 1/13/2010 7:34:45 AM

புதுக்கோட்டை: புதுக்கோட்டை தமிழ்நாடு அறிவியல் இயக்க வளாகத்தில் எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவன கிராம வள மையம் சார்பில் பருவ கால அட்டவணை தயாரிப்பு பயிற்சி முகாம் நடைபெற்றது.

கிராம வள மைய இணைத் திட்ட அலுவலர் முருகேசன் வரவேற்றார். அறிவியல் இயக்க மாவட்ட தலைவர் பிரபாகரன் தலைமை வகித்தார். மண்டல கால்நடை பல்கலைக்கழக பேராசிரியர் மற்றும் தலைவர் ரிச்சர்டு ஜெகதீசன் பயிற்சி மைய துவக்கி வைத்து உரையாற்றினார்.

சென்னை எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவன முதுநிலை விஞ்ஞானி ஸ்ரீகாந்த் பருவகால அட்டவணையில் முக்கியத்துவத்தை விளக்கி பேசினர். மைய ஒருங்கிணைப்பாளர் ராஜ்குமார் பேசும்போது, தேவையின் அடிப்படையில் தகவல்களை அளித்தல், திறன் மேம்பாட்டிற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் அரசு மற்றும் தனியார் நிறுவனங்களுடன் தொடர்பை ஏற்படுத்துதல் ஆகியவை கிராம வள மையத்தின் முக்கிய பணிகளாகும். நமது மாவட்டத்தில் விவசாயம், கால்நடை வளர்ப்பு, சுகாதாரம், கல்வி போன்ற முக்கிய துறைகளில் எந்தெந்த பருவ காலங்களில் என்னென்ன நிகழ்வுகள் நடைபெறுகின்றன என்ற பருவகால அட்டவணை தயாரிப்பதன் மூலம் அந்தந்த காலங்களில் நடைபெறும் நிகழ்வுகளுக்கு ஏற்ப நிகழ்ச்சிகளை திட்டமிட மற்றும் நடைமுறைப்படுத்த வாய்ப்பாக அமையும். எனவே தான் அரசு அலுவலர்களும், களத்தில் செயல்படுபவர்களும் இணைந்து முழுமையான பருவகால அட்டவணை தயாரிப்பதற்காக இந்த பயிற்சி முகாம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்றார்.

பயிற்சி முகாமில் விவசாயம், கால்நடை வளர்ப்பு, கல்வி, சுகாதாரம் ஆகிய 4 குழுக்களாக பிரிக்கப்பட்ட கலந்துரையாடல் மூலம் பருவகால அட்டவணை தயாரிக்கப்பட்டது. பயிற்சி முகாமில் புதுக்கோட்டை மகளிர் கல்லூரி தாவரவியல் துறைத் தலைவர் முனைவர்.கோமளவள்ளி, விவசாய ஆசிரியர் செந்தில்குமார், சுகாதார ஆய்வாளர் ராவணன், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்ட சிறப்பு பயிற்சியாளர் புஷ்பகலா, முன்னோடி விவசாயிகள் கூவாட்டுப்பட்டி முருகேசன், தளிஞ்சி ராமசாமி ஆகியோர் கருத்தாளர்களாக கலந்து கொண்டனர். குருமூர்த்தி நன்றி கூறினார் .

### கரும்பு உற்பத்தி பயிற்சி விவசாயிகள் பங்கேற்பு

பதிவு செய்த நாள் 1/13/2010 7:29:32 AM

மன்னார்குடி: கரும்பு விவசாயத்தில் சொட்டுநீர் பாசனத்தை பயன்படுத்தியும், இயந்திரங்களை பயன்படுத்தியும் உற்பத்தியை அதிகப்படுத்துதல் குறித்த பயிற்சி கருத்தரங்கம் திருஆரூரான் சர்க்கரை ஆலை சார்பில் மன்னார்குடியில் நடந்தது.

மன்னார்குடி, பாபநாசம், அம்மாபேட்டை, வடுவூர் உட்பட 4 பகுதிகளில் நடை பெற்ற கருத்தரங்கில் சிறு குறு விவசாயிகள் உட்பட சுமார் 500 பேர் பயிற்சி பெற் றனர். ஆருரான் சர்க்கரை ஆலை பொது மேலாளர் திருநாவுக்கரசு, துணை மேலாளர்கள் வெங்கடேச பெருமாள், ராஜ்குமார் ஆகி யோர் தலைமையில் பயிற்சி வகுப்பு நடந்தது. இது குறி த்து துணை மேலாளர் வெங் கடேச பெருமாள் கூறுகை யில், கரும்பு உற்பத்தியில் ஆட்கள் மற்றும் தண்ணீர் தட்டுப்பாடு, கரும்பு அறு வடை செய்து ஆலைக்கு அனுப்பி வைப்பதற்கான சேதாரம் ஆகியவற்றால் கரும்பு சாகுபடி செய்வதில் விவசாயிகளுக்கு ஆர்வம் குறைந்து வருகிறது. இதை தவிர்க்க விவசாயிகள் சொட்டுநீர் பாசனம், இயந் திர சாகுபடி முறை போன்றவற்றின் பலன் குறித்து விள க்கப்பட்டது. இது குறித்த சந்தேகங்களுக்கு 944220 3752 என்ற செல் எண்ணில் தொடர்பு கொள்ளலாம் என்றார்.